Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்),
யாழ்ப்பாணம்.



* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 10 (30.05.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :241

# உடன்படிக்கையினை தொடர்ந்து மீறினால் கூட்டணியிலிருந்து வெளியேறிவிடுவோம்!

## சந்திரிகாவிடம் ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைக்கப்பட்டபோது-**

**கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் தொடர்ந்தும் மீறப்படுமானால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து வெளியேறுவோம் என்று, ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -**

கடந்த 27 ஆம் திகதி ஜே.வி.பியின் தலைமையகத்தில் இடம்பெற்ற அரசியல் நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்த எச்சரிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பான விமர்சன அறிக்கையொன்றை, ஜே.வி.பி.- ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஓரிரு தினங்களில் கையளிக்கவுள்ளது.

அத்துடன் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், மோதல்கள் தொடர்பாக ஜே.வி.பியினர் நாளை மாலை ஆறு மணிக்கு ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடலை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சமாதானப் பணிக்காக இலங்கைப் படையினர் ஹெயிட்டி செல்கின்றனர்!

(கொழும்பு)

ஹெயிட்டியில் நிலவும் உள்நாட்டுக் குழுப்பத்தைக் கட்டுப்படுத்தி கண்காணிக்கும் ஐ.நா.சபையின் சமாதானப் படைப்பிரிவில் இணைத்துக் கொள்வதற்காக, 750 படையினரை இலங்கை அரசு அனுப்பி வைக்கவுள்ளது.

இந்த 750 படையினரும் எதிர்வரும் ஜூலை மாதம் ஹெயிட்டி செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடல் கடந்து சமாதானப் பணியில் ஈடுபடுவதற்காக மிகப்பெரியளவிலான இலங்கைப் படையினர் செல்வது இதுதான் முதற்தடவையெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெயிட்டியில் நிலவும் உள்நாட்டுக் குழப்பத்தைக் கட்டுப்படுத்தி, அங்கு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டப்பகலில் இளைஞர் ஒருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

(வவுனியா)

வவுனியா - குருமன்காட்டு பிள்ளையார் கோவிலருகே - ரயில்வே கடவையில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

குருமன்காட்டு பிள்ளையார் கோயிலருகே, ரயில்வே கடவைப் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

அங்கே இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இளைஞர் நேற்றுக் காலை 10 மணியளவில் சுடப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையில் இருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியிருந்ததாகவும் இதனால் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய அரசின் உதவியுடன் வவுனியாவிலிருந்து கேபிள் மூலம் கிளிநொச்சிக்கு மின்சார வசதிகள்

## 250 கோடி ரூபா செலவில் திட்டம்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து 250 கோடி ரூபா செலவில், அதிக மின்சக்திகளை கடத்தக்கூடிய கேபிள்கள் மூலம் கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் புதிய திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இந்தப் பாரிய திட்டம் பூர்த்தியடைந்த பின்னர், கிளிநொச்சியில் உள்ள சுமார் 2 லட்சம் பேருக்கு மின்சார வசதிகள் கிடைக்கும். எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தைச் சிறப்பாக மேற்கொள்வது தொடர்பாக நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலர் கே.கணேஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைவதற்கு

ருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையில் இருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியிருந்ததாக வும் இதனால் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

இந்தப் புதிய திட்டத்திற்கு ஜப பானிய அரசாங்கம் நிதி உத வியை வழங்க முன்வந்துள்ளது.

# மாவின் விலையை அதிகரித்தால் அரசுடனான ஒப்பந்தம் இரத்தாகும்!

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

கோதுமை மாவின் விலையை பிறிமா நிவனம் அதிகரித்தால் அந்த நிறுவனம் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் இரத்தாகுமென வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அந்த நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

அமைச்சர் கடந்த வெள்ளி யன்று தனது அமைச்சுக் செயலகத்தில் பிறிமா நிறுவன அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவின் விலையை அதிகரிக்க இடமளிக்க வேண்டுமெனவும், அவ்வாறில்லையெனில் தாம் பொறுப்பேற்கின்ற மேலதிக செலவை அரசு ஏற்கவேண்டுமெனவும் இவற்றை ஏற்க மறுத்தால் தாம் இலங்கையைவிட்டு செல்லப்போவதாகவும் பிறிமா நிறுவத்தினர் கூறியுள்ளனர்.

தேவைப்பட்டால், நாட்டை விட்டு வெறியேறுமாறும் அது போன்ற நிலைவரத்தின் கீழ் வேறு நிறுவனங்கள் மூலமாக ரூபா 22ற்கு மாவினைப் பெற்றுக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பு விபத்தில் ஐந்து பேர் படுகாயம்!

(புதுக்குடியிருப்பு)

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் ஹயேஸ் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில், ஐந்து வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள கைவேலிப்பகுதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது, முள்ளியவளை தண்ணீர் ஊற்றைச் சேர்ந்த 70 வயதான சிவபாக்கியம், 55 வயதான கருணா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் இணைவதற்கு தொண்டமான் முயற்சி!

## கட்சி வட்டாரங்கள் தகவல்

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின் பின்னர் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இணைவதற்கான இரகசியப் பேச்சுக்களை நடத்திவருவதாக அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைவது குறித்து, கூட்டணிக் கட்சியில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட தலைவர்கள் சிலருடனும் தமக்கு நெருக்கமான (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும்

# ஏ-9 சோதனைச்சாவடிகள் 6 மணிவரை திறந்திருக்கும்

முல்லைத்தீவு - வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழாவினை முன்னிட்டு, ஏ-9 வீதிச் சோதனைச் சாவடிகள் இன்றும், நாளையும் மாலை 6 மணிவரை திறந்திருக்கும் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

வற்றாப்பளைப் பொங்கல் உற்சவம் நாளை நடைபெறுவதை முன்னிட்டு ஏ-9 வீதியில் உள்ள முகமாலை, ஓமந்தைச் சோதனைச் சாவடிகளை இரவு பகலாகத் திறந்து விடுமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது.

ஆனால்- பக்தர்கள் நலன்கருதிச் சோதனைச் சாவடிகளை ஒரு மணிநேரம் கூடுதலாகத் திறந்திருக்க இராணுவத்தரப்பு அனுமதி அளித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

### நெடுந்தீவு கடற்போக்குவரத்திற்கு

# இந்திய இழுவைப் படகைப் பயன்படுத்த

# அனுமதிக்குமாறு கோரி தீர்மானம்

நெடுந்தீவுப் பகுதிக்கான கடற்போக்குவரத்து சேவைக்கு உடனடியாக இந்திய இழுவைப் படகொன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, யாழ்.அரசாங்க அதிபரைக்கோரும் தீர்மானம் நெடுந்தீவு பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த பல நாட்களாக நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து சீர்குலைந்த நிலையிலுள்ளதால் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வருவதனால், அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும்போது கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப் படகுகளில் ஒன்றை உடனடி தேவையைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவுப் போக்குவரத்துக்கு தற்காலிகமாக சேவையில் ஈடுபடுத்த நெடுந்தீவு உதவி அரச அதிபரின் பொறுப்பிலேயே ஒப்படைக்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, தற்போது திருத்த வேலை இடம்பெறும் "உதயதாரகை" படகுவேலைகள் இன்னும் ஓரிரு வாரங்களில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் தெரிவித்தார். (113)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு ஒன்றரைமாத சிறைத்தண்டனை

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் ஒன்றரைமாதகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அபூபக்கர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் சிறுகுற்றப்பிரிவுப் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட இருவழக்குகளின்போதே, யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி- நந்தசேகரன் மேற்படி தண்டனையை வழங்கினார்.

குற்றவாளி முதலாவது குற்றத்துக்கு இரண்டுவாரகாலச் சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றத்துக்கு ஒருமாதகால சிறைத்தண்டனையையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கைக்கான சின்மய மிஷன் ஆதரவு பிரதம ஆச்சாரியார் ரமணானந்தசுவாமியுடனான கலந்துரையாடல் இன்று மு.ப.11.30 மணிக்கு கல்வியங்காடு திவ்ய ஜீவன சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இந்து சமுத்திர முத்தில், இந்துதர்மம் காப்பதற்கான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

## பொதுமண்டபத் திறப்புவிழா இன்று புலோலியில்

நியாப்திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமண்டபக் கட்டடத்திறப்புவிழா இன்று மு.ப.10 மணிக்கு புலோலி தெற்கில் நடைபெறவுள்ளது.

புலோலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமிநாதன் ஆகியோர் கட்டடத்தை திறந்துவைப்பார்கள்.

இந்த நிகழ்வில் நியாப் உதவித் திட்டப்பணிப்பாளர் பாலகிருஷ்ணன், பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் சு.வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

### அடுத்தவருடம் முதல்

## முதலாம் தர வகுப்புக்களில் 40 மாணவரை அனுமதிக்குக

### கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

அடுத்த ஆண்டிற்கான முதலாம் தர வகுப்பிற்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளும்போது, ஒரு வகுப்பிற்கு 40 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் தாரா.டி.மெல் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போதே, இதனைத் தெரிவித்தார். 2005 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டிற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் முதல் அனுப்ப முடியும் என்றும், இதுதொடர்பாக சகல பாடசாலைகளுக்கும் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தச் சுற்றுநிருபங்களின் படி செயற்படாத அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (17)

### சௌந்தரராஜனின் மகன் கோண்டாவிலுக்கு விஜயம்

பிரபல பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் மகன் ரி.எம்.எஸ்.செல்வகுமார் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயத்துக்கு நேற்று விஜயம்செய்தார்.

மேற்படி ஆலயத்தில் செவ்வாயன்று நடைபெறும் ரதோற்சவதினத்தன்று இரவு இசைக்கச்சேரி நடாத்தவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.


அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்
சுரபி பதிப்பகம்
பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5107


## உதைபந்தாட்டப்போட்டி

தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்காக நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப்போட்டிகள் இன்று குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

பி.ப. 2 மணிக்கு நவாலி சென் பீற்றர் கழகத்தை எதிர்த்து - மணற்காடு யங்கம்பஸ் விளையாட்டுக்கழகம் மோதும்.

மூன்று மணிக்கு பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து - வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மோதும்.

பி.ப. 4 மணிக்கு மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து - வல்வை விளையாட்டுக் கழகம்மோதவிருக்கிறது. (206)


நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், லைலா, வடிவேல் நடித்த
கம்பீரம்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2386)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் சுமார் ஒரு பரப்புக்காணி ($17^1/_8$ குழி) சிறு கட்டிடத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி NO-35, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் குறிப்பு :- பார்க்க விரும்புபவர்கள் இன்று சந்திப்பது விரும்பத்தக்கது. (741)

### வரலாற்று ஆவணங்கள்

கலாநிதி க.குணராசா-- ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty, மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலை, 24 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு - பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2583)

### நாவல்கள்

செங்கை ஆழியானின் புதிய நாவல்கள் - போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும்.. கிடுகு வேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்.. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2582)


ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

(சி-2387)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சதா, விவேக நடித்த


அடுத்த வெளியீடு
விஜயின் கில்லி
(நீலம்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


அருள் திரைப்படத்திற்கான குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அதிஷ்ட சீட்டிழுப்புக்களின் இலக்கங்கள

முதலாம் பரிசு - 37097
இரண்டாம் பரிசு - 39330
மூன்றாம் பரிசு - 39312

இவ் இலக்கங்கள் நுழைவுச் சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் 1.06.2004 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.


எரிக்கணேஷ்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து, நவீன ரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறே லென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
(கட்டுப்பற்களைச் சுத்தம் செய்யவும் மாத்திரை விற்பனைக்குண்டு)
கிளை இல-91, K.K.S Road, Kokuvil.
கிளை இல-80, K.K.S Road, Chunnakam.
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டும் இடமும்.
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 222-2486
(சி/2616)


### சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

## புதிய சப்பற வெள்ளோட்டம்

மாபெரும் சக்திபீடமாக சுதுமலையில் விளங்குகின்ற அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சந்நிதானத்தில் அம்பாளின் திருவருளாலும் பரந்து வாழும் 16 ஆம் திருவிழா உபயகாரர்களாகிய சுதுமலை தெற்கு அடியார்களின் காணிக்கையாலும் புதிய நாற்பத்தைந்தரை (45 1/2) அடி உயரமான மிகவும் அழகிய திருச்சப்பறம் உருவாக்கப்பட்டுள்ளதென்பதை மிக்க பக்திசிரததையுடன் யாவர்க்கும் அறியத்தருகின்றோம்.

இச்சப்பறம் 31.05.2004 திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் வெள்ளோட்டம் நடைபெறும். அன்றைய தினம் தேவஸ்தான பிரதம குருவும், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியுமாகிய ஐ.மகேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசியுரையும், பரமாசார்ய சுவாமிகள் இரண்டாவது குருமா சந்நிதானம் முதல்வர் திருஞானசம்பந்தர் நல்லை ஆதீனம், அவர்களின் அருளுரையும், செஞ்சொற் செல்வர் திரு. ஆறுதிருமுருகன் - (B.A - உப-அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அவர்களது வாழ்த்துரையும், பேராசிரியை கலைவாணி இராமநாதன் (இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களுடைய சிறப்புரையும் நடைபெற அம்பாளின் திருவருள் கிட்டியுள்ளது.

மேலும் 01.06.2004 செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணியளவில் புதிதாக அமைக்கப்பெற்ற சப்பறத்தில் - விநாயகரும், முருகனும் அருகிலிருக்க சப்பறத்தில் ஆரோகணித்து அருள் பாலிப்பாள்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து அடியார்கள் யாபேரும் இஸ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அழைக்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (சி/2602)
16 ஆம் திருவிழா உபயகாரர்கள்

# 6 மாகாணசபைகளுக்கு ஜூலை 10 இல் தேர்தல்!

(கொழும்பு)

ஆறுமாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் பத்தாம் திகதி நடைபெறுமெனத் தேர்தல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், மத்திய, தென், வடமத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் அன்றைய தினம் இடம்பெறும்.

காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெறும். சகல தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் முடியும்.

இதேவேளை மேல், தென், வட மத்திய, சப்ரகமுவ மாகாணசபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்னதினம் நண்பகலுடன் முடிவடைந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி உட்பட பல பிரதான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் நேற்றுமுன்தினம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை உட்பட்ட மாவட்டச் செயலகங்களில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதற்காக விசேட பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மேல்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சரான றெஜினோல்ட் குரே, முன்னாள் பிரதியமைச்சர் மஹிபால ஹேரத் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் முன்னாள் பிரதியமைச்சர் உபாலி சமரவீர மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

றெஜினோல்ட் கூரே மேல்மாகாண சபைக்காகவும், மஹிபால ஹெரத் சபரகமுவ மாகாண சபைக்காகவும், உபாலி சமரவீர ஊவா மாகாண சபைக்காகவும் போட்டியிடவுள்ளனர்.

# ரெலிகொம்மின் எஞ்சிய பங்குகளை புதிய அரசாங்கம் விற்காதாம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான அரசு சிறிலங்கா ரெலிகொம்மின் 49.5 வீதமான பங்குகளை விற்பனை செய்ய மாட்டாது.

இவ்வாறு தபால், தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் றோகித அபய குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ரெலிகொம் என்பது இன்றியமையாத ஒரு சேவையாகும்.இதனை விற்பனை செய்வது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை.

எவ்வாறாயினும் இதற்கான இறுதி முடிவு நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலின் பின்னர், ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துவிட்டே இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிக்கையில், ரெலிகொம் மற்றும் விமான சேவைகளின் பங்குகள் அரசாங்கத்தினால் விரைவில் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (01)




மன்னார் - வாழ்வோதயத்தில் இந்திய மீனவ பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றுகிறார்.

# ஆயிரம் மில்லியன் ரூபா நட்டத்தை அரசாங்கம் ஈடுசெய்யாவிடின் நிறுவனத்தை மூடிவிடுவோம்!

## பிறிமா நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

பிறிமா நிறுவனத்துக்கு கடந்த காலத்தில் கோதுமை மா உற்பத்தியில் ஏற்பட்ட ஆயிரம் மில்லியன் ரூபா நட்டத்தை அரசாங்கம் செலுத்தத் தவறினால், தாம் இலங்கையில் இருந்து வெளியேறப் போவதாக - பிறிமா நிறுவனம் எச்சரித்துள்ளது.

பிறிமா நிறுவனத்துக்கு அரசாங்கம் மானியம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஒரு கிலோ மாவின் விலையை 5 ரூபாவிலிருந்து 6 ரூபாவால் உயர்த்தப்போவதாக பிறிமா நிறுவனம் அறிவித்தது.

இதனை அடுத்து நுகர்வோர் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, கோதுமை மாவை அத்தியாவசியப் பொருளாகப் பிரகடனப்படுத்தி, எவரும் தன்னிச்சையாக கோதுமை மாவின் விலையை உயர்த்தக் கூடாது என உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பிறிமா நிறுவனத்தின் அதிபருக்கும், நுகர்வோர்துறை அமைச்சருக்கும் இடையில் சமரசப் பேச்சுக்கள் இடம்பெற்றது.

இதன்போது - அரசு பிறிமா நிறுவனத்துக்கு மானியங்களை வழங்கவேண்டும் என்றும், அதனை அரசு தரமறுத்தால் பிறிமா நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ள ஆயிரம் மில்லியன் ரூபா நட்டத்தினை வழங்கவேண்டும் என, நிறுவனத்தின் அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்றத் தவறின், பிறிமா நிறுவனம் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர எந்த முடிவும் எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் - பிறிமா நிறுவனம் நாட்டிலிருந்து வெளியேறினால் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும், இதைத் தடுக்க அரசு இந்திய உதவியை நாடுவதைத் தவிர வேறுவழி இருக்காது என்றும் கூறப்படுகிறது.

# இராணுவத்தின் முதல் தொகுதி விரைவில் ஐ.நா சமாதானப் படையில்!

(கொழும்பு)

ஐ.நா சபையின் சமாதானப் படைப் பிரிவில், இலங்கைப் படையினரின் முதலாவது தொகுதி விரைவில் இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவிக்கையில் -

ஐ.நாவின் சமாதானப் படைப் பிரிவில் இணைத்துக்கொள்வதற்கு முதன் முதலாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பற்றாலியன் ஒன்று அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் இலங்கைப்படையினருக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இளைஞர்கள் பெருமளவில் சேர முன்வராத காரணத்தால் இராணுவத்தலைமையகம் இராணுவத்தில் சேரும் இளைஞர்கள் ஐ.நா.சபையின் சமாதானப் படைப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்ற கவர்ச்சியான விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற ஒழுக்கம் குறித்து எம்.பிக்களுக்கு புகட்டவேண்டும்

## அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற ஒழுக்கம் தொடர்பாக புகட்டப்பட வேண்டுமென அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம புத்தரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தரக்குறைவாக நடந்துகொள்வதாக அவர் குறிப்பிட்டார். பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தன நேற்றுக் காலை அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றபோதே தேரர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆட்சி நடத்திய அரசுகள் மக்களை ஏமாற்றி வந்துள்ளதாக குறிப்பிட்ட தேரர், நாட்டை வளப்படுத்த தற்போதைய அரசு செயற்பட வேண்டுமென்றும் கூறினார். பிரதி சபாநாயகர் தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி

# மாணவர்கள் மீதான தாக்குதல் பொலிஸ் விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு)

ஹற்றன் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளது.

இந்த மோதல் இடம்பெறுவதற்கு வெளியார் சிலர் தொடர்புபட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசில் பெரேரா தெரிவித்தார்.

இவர்கள் பதுளை, பண்டாரவளை ஆகிய தூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென சந்தேகப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அவர்கள் யாரென்பது இதுவரை தீர்க்கமாக கண்டறியப்படவில்லை.

ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலின் போது, எட்டு மாணவர்களும், இரண்டு பொலிசாரும் காயமடைந்தனர். காயமடைநத ஐந்து யுவதிகளும் மூன்று இளைஞர்களும் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மலையக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் சரவணகுமார் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பத்தனை சிறிபாத கல்வியற் கல்லூரி ஆசிரியர் பயிலுநர்களால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கல்லூரியை உடனடியாக திறக்குமாறும், கல்லூரியில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் தொடர்பாக உடன் விசாரணைகள் நடாத்துமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் ஹற்றன் டன்பார் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, கல்லூரியை நோக்கி மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்த முற்பட்ட போது மல்லிகைப்பூ சந்தியில் வைத்து மாணவர்களுக்கும் பொலிசாருக்கும் மோதல் இடம்பெற்றது.

இதனையடுத்து பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்கும் பொருட்டு மேற்கொண்ட கண்ணீர்ப்புகை மற்றும் குண்டாந்தடிப் பிரயோகத்தின் போதே மாணவர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை, ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியை எதிர்வரும் 16 ஆம் திகதி திறப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

# புலிகளிடம் விமானம் இருப்பது குறித்து தாம் அச்சம் கொள்ளவில்லையாம்!

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விமானப்படை இருப்பது குறித்து அதிகம் அச்சம் கொள்ளத் தேவையில்லை என விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விமானத்தளம் ஒன்றிருப்பது தமக்கு முன்னரே தெரிந்த செய்தியெனக் குறிப்பிட்டுள்ள அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள விமானத்தை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மாத்திரமே பயன்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதியை மீறிப் இராணு வக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் விடுதலைப் புலி களின் விமானங்கள் பயணம் செய்யும் பட்சத்தில் அது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகவே அமையுமெனவும், விடுதலைப் புலிகளிடம் விமானத் தளம் ஒன்றிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் ஒத்துக்கொண்டிருப்பதும், குறித்து விமானப்படை உத்தியோகபூர்வமாக கருத்து வெளியிட்டிருப்பதும் இதுவே முதற்தடவையாகும்.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவது போர் நிறுத்த மீறல் என்று தெரிவித்திருப்பதன் மூலம், அந்த விமானங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பறக்கமுடியும் என்பதை விமானப் படைத்தளபதி ஒப்புக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் காந்தி படுகொலை குறித்து புதிதாக எதையும் கண்டுபிடிக்கவில்லை

## முன்னாள் சி.பி.ஐ இயக்குநர் பேட்டி

ராஜீவ் காந்தி கொலைபற்றி ஏற்கனவே விசாரணைகளை நடத்தி கண்டுபிடித்ததன் பின்பு, மேலதிகமாக எதையும் கண்டுபிடிக்கவில்லை என்று இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.பி.ஐ) முன்னாள் இயக்குநர் டி.ஆர்.கார்த்திகேசன் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் விசாரணை செய்த ஜெயின் கமிஷன் மேலதிக விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்ட குழுவின் காலத்தை நீடிக்க வேண்டுமென்று, மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே, கார்த்திகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் புலனாய்வு செய்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து - வழக்கு நடந்து தீர்ப்பு வெளியான பின்னர் எந்தவித தடயமோ, தகவலோ இதுவரைக்கும் மத்திய புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கவில்லை.

ராஜீவ் கொலை வழக்கில் வேறு எந்தக் கட்சிக்கோ, வெளிநாட்டுக்கோ எந்தவிதத் தொடர்புமில்லை என்பது எனது முடிவான கருத்து.

தி.மு.க சார்பில் மத்திய அமைசசராக நியமிக்கப்பட்ட சுப்புலட்சுமி ஜெகதீஸன் ராஜீவ் கொலை சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீரப்பன் இருக்கும் இடம் தெரிந்து அதிரடிப்படையினர் முற்றுகையாம்!



(சென்னை)

தமிழர் விடுதலைப் படைத்தலைவர் சு.ப.இளவரசனும், அவரது கூட்டாளி சகாதேவனும் கடந்த 25 ஆம் திகதி தமிழக - கர் நாடக எல்லையிலுள்ள மாதேஸ்வரன் மலைப் பகுதியில் சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சந்திக்கச் சென்றபோது அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து கைதுசெய்தனர்.

அந்த நேரத்தில் இளவரசனுடன் சென்ற மேலும் 2 பேர் ஆயுதங்களைக் கீழேபோட்டு விட்டு காட்டுக்குள் தப்பியோடிவிட்டனர்.

கைது செய்யபட்ட சுப.இளவரசனும், சகாதேவனும் மேட்டூர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். பொலிஸார் மனுத்தாக்கல் செய்யாததைத் தொடர்ந்து பொலிஸ் காவலில் இருவரையும் வைத்து விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதற்கிடையே இளவரசனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் வீரப்பனைப் பற்றியும், அடுத்த கட்டத் திட்டங்கள் பற்றியும் தகவல்கள் கிடைத்தன.

அதாவது, வீரப்பன் தற்போது தமிழக - கர்நாடக எல்லையிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் தனது கூட்டாளிகளுடன் பதுங்கி இருப்பதாக அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்தது.

சுப.இளவரசன் கொடுத்த தகவலைத் தொடர்ந்து வீரப்பன் இருக்கும் இடத்தை அதிரடிப்படையினர் கண்டுபிடித்துவிட்டனர். இதைத்தொடர்ந்து மாதேஸ்வரன் மலை, கார்கே கண்டி, பாலாறு, ராமாபுரம் ஆகிய பகுதிகளில் இரு மாநில அரசுகளின் அதிரடிப்படையினரும் நவீன ரக இயந்திரத் துப்பாக்கிகளுடன் முற்றுகையிட்டுள்ளனர்.

நான்கு பிரிவுகளாக அதிரடிப்படையினர் பிரிந்துசென்று, தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தேடுதல் வேட்டையின்போது, வீரப்பன் தப்பிச் சென்றுவிடாமல் இருக்க சத்தியமங்கலம் தாளவாடி, சிறுமுகை, மேட்டுப்பாளயம் ஆகிய வனப்பகுதிகள் சீல்வைக்கப்பட்டு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, அதிரடிப்படையின் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது -

சுப.இளவரசனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் வீரப்பன் இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. இதைத் தொடர்ந்து அவரைக் குறிவைத்துப் பிடிக்க தீவிர தேடுதல்வேட்டை நடந்து வருகிறது. ஓரிருதினங்களில் வீரப்பன் இருக்கும் இடத்தை நெருங்கிவிடுவோம். இந்தமுறை எங்களிடமிருந்து வீரப்பன் தப்ப முடியாது. அவரை உயிருடனோ, பிணமாகவோ பிடிப்பது உறுதி.

தற்போது வீரப்பனுடன் தமிழ்த்தீவிரவாதி சேதுமணி என்பவன் இருப்பது தெரிய வந்துள்ளது. அவனையும் பிடிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### தடாவில் கைதுசெய்தபின்பு
## கருணாநிதிக்கு எதிராக சாட்சிசொல்ல வற்புறுத்தினர்
### மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி

தடாவில் கைதானபோது கருணாநிதிக்கு எதிராக சாட்சி சொல்ல வற்புறுத்தினார்கள் என்று, மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் கூறினார்.

மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அளித்த பேட்டியில் கூறியதாவது-

கேள்வி: விடுதலைப்புலிகளைப் பலர் ஆதரித்தபோது உங்களை மட்டும் ஏன் புலி ஆதரவாளர் என்று 1991 ஆம் ஆண்டு தடா சட்டத்தில் கைது செய்தார்கள்?

பதில்: நான் விடுதலைப்புலிகளை என் வீட்டில் தங்க வைத்துப் பாதுகாப்பு கொடுத்ததாகவும், கலைஞர்தான் புலிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்படி சொன்னார் என்றும், நான் நீதிமன்றில் சாட்சியம் அளிக்க வேண்டும். அதைக்கொண்டு கலைஞரையும் கைது செய்து, தி.மு.க.வையும் தடைசெய்யவேண்டும்.

அதற்கு தடா சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் இதுதான் அவர்களின் திட்டம். அவர்கள் தரப்பிலிருந்து பல பேர் அடுத்தடுத்து வந்து, என்னிடம் இப்படி நீதிமன்றில் சொலும்படி சொன்னார்கள்.

அதுவும் அப்போதைய மேலிடத்துக்கு நெருக்கமான ஒரு அரசியல் பெண்மணி வந்து என்னை துணை முதல்வராக ஆக்க விரும்புவதாகவும், பைல் பார்ப்பதில் பயிற்சியுள்ள ஒரு பெண்மணி தேவை என்பதால் எனக்குத் துணை முதல்வர் பதவி கொடுக்கவும் தயாராக இருப்பதாகவும் பேரம் பேசினார்.

மதுரையில் அ.தி.மு.க. மாநாடு நடந்தபோதும் இரண்டு முக்கிய அ.தி.மு.க. தலைவர்கள் வந்து இப்படி சொல்லச்சொன்னார்கள். ஆனால் நான் மறந்துவிட்டேன். ஒன்பது மாத சிறைவாசத்தின் இறுதியில், நீதி வென்றது. நியாயம் வென்றது. என்மீது போட்ட பொய் வழக்குத் தோற்றது. நான் விடுதலை பெற்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

## பா.ஜனதா - தெலுங்குதேசம் கூட்டணி முறியும் நிலையில்!

(சென்னை)

பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசக்கட்சியும் இடம்பெற்று இருந்தது. வாஜ்பாய் தலைமையிலான கடந்த ஆட்சியில் தெலுங்கு தேசம் பங்கேற்கவில்லை. என்றாலும், வெளியிலிருந்து ஆட்சிக்கு ஆதரவளித்து வந்தது.

நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திர மாநில சட்டசபைக்கும், தேர்தல் நடைபெற்றது. இதில் பா.ஜனதா, தெலுங்கு தேசம் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. ஆனால், ஆந்திர மாநிலத்திலும், மத்தியிலும் இந்தக்கூட்டணி தோல்வியைத் தழுவியது.

இந்த நிலையில், தெலுங்கு தேசம் கட்சியின் 2 நாள் பொதுக்குழு கூட்டம் (மாநாடு) தலைநகர் ஹைதரபாத்தில் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் பேசிய பெரும்பாலான தலைவர்கள் பா.ஜனதாவுடன் கூட்டணி அமைத்ததுதான் தோல்விக்கு முக்கிய காரணம் என்றும், குஜராத் கலவரத்துக்குப் பிறகு சிறுபான்மையோர் தங்கள் கட்சியை விட்டு விலகிச் சென்றுவிட்டதாகவும் கருத்துத் தெரிவித்தனர்.

மாநாட்டில் பேசிய கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவும் தேர்தல் தோல்விக்கான காரணம் குறித்து முதல்முறையாக வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தார். குஜராத் கலவரம் சிறுபான்மையோர் மத்தியில் ஏற்படுத்திய ஆழமான பாதிப்பே தேர்தல் தோல்விக்குக் காரணம் என்பதை அவர் ஒத்துக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து பா.ஜனதா - தெலுங்கு தேசம் கட்சிகளுக்கு இடையேயான கூட்டணி, முறியும் நிலை உருவாகியுள்ளது. தெலுங்கு தேசக் கட்சி பொதுச் செயலாளர் சி.இராமச்சந்திரய்யா நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது பா.ஜனதாவுடன் உள்ள கூட்டணியை மறுபரிசீலனை செய்யும்படி கட்சி, தலைமையை வற்புறுத்தி இருப்பதாக குறிப்பிட்டது, அதை உறுதிசெய்வதாக அமைந்துள்ளது.

# இந்திய செய்திகள்

### நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில்
# பாரதீய ஜனதாவின் தோல்விக்கான காரணத்தை விளக்கினார் அத்வானி



(புதுடெல்கி)

நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா தோல்வியடைந்தது ஏன்? என்பது குறித்து அத்வானி விளக்கம் அளித்துள்ளார்.

தேர்தலுக்குப்பின் நேற்றுமுன்தினம் முதன் முதலாக நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது -

கருத்து ஒற்றுமை அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என, மக்கள் விரும்புவதை தேர்தல் முடிவு காட்டுகின்றது. மக்களின் இந்தத் தீர்ப்பை உணர்ந்து புதிய அரசு செயற்படும் என நம்புகிறேன். தேர்தலில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பை காங்கிரஸ் தவறாக புரிந்துகொள்ளக்கூடாது.

இந்தியா - ஒளிர்கிறது. எல்லாம் நல்லபடியாகவே உள்ளது. என்ற பாரதீய ஜனதாவின் பிரசாரம் எடுபடவில்லை.

வாஜ்பாய் அரசின் சிறந்த நிர்வாகம், அபிவிருத்திப் பணிகள் குறித்த பிரசாரம் எங்களுக்கு சாதகமாக இருந்தபோதிலும், சில மாநிலங்களில் அரசுமீதான அதிருப்தியும் உள்ளூர் பிரச்சினைகளும் எங்களுடைய தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டன. சில மாநிலங்களில் நாங்கள் சரியான கூட்டணி அமைக்கவில்லை.

நாங்கள் அரசின் சாதனைகளைச் சொல்லி பிரசாரம் செய்தபோது, எதிர்க்கட்சியினர் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு எல்லாம் தேசிய ஜனநாயக கூட்டணிதான் காரணம் என்று, எதிர்மறையான பிரசாரம் செய்தனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பாரதீய ஜனதா மிகப்பெரிய தோல்வியை சந்தித்தது. 2 நாடாளுமன்றத் தொகுதிகள்தான் கிடைத்தன. ஆனால், அதற்குப் பிறகு நடந்த தேர்தலில் பாரதீய ஜனதாவின் செல்வாக்கு நிரூபிக்கப்பட்டது.

இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக உருவாக்குவதற்கு பாரதீய ஜனதா தொடர்ந்து பாடுபடும். தேசிய கலாசாரம், இந்துத்துவக் கொள்கைகளில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எங்களுடைய இந்தக் கொள்கைகள் பற்றி பிறகட்சியினர் செய்யும் பிரசாரம் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை.

அயோத்தி பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுவார்த்தை மூலமோ அல்லது நீதிமன்றத் தீர்ப்பின் மூலமோ தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் உயர் பதவி வகிக்கக்கூடாது என்று நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே கூறிவருகிறோம். இது ஒரு தனிப்பட்ட நபர் சம்பந்தமான பிரச்சினை அல்ல. அரசியல் பிரச்சினை.

தேசிய ஜனநாயகக் கூட்டணி மேலும் பலப்படுத்தப்படும், மக்களுடனான எங்கள் தொடர்பு பலப்படுத்தப்படும். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை உன்னிப்பாக கவனிப்போம். நாடாளுமன்றத்திலும், வெளியேயும் மக்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுப்போம்.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு அடுத்த மாதம் கூட இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் தேர்தல் முடிவைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும்.

மன்மோகன்சிங், அரசியலில் தூய்மையானவர் எனப் பெயர் பெற்றவர். சில அரசுகள், அரசியலில் சூழ்நிலைகள் காரணமாக குற்றவாளிகளின் செயல்களை கண்டும் காணாமல் இருப்பதுமுண்டு.

ஆனால், முதற் தடவையாக அத்தகைய சக்திகள் சில இப்போது மத்திய அமைச்சரவையில இடம்பெற்றுள்ளன. இதற்கான காரணத்தை மக்களுக்குப் பிரதமர் விளக்கவேண்டும். பொடா சட்டம் ரத்துச்செய்யப்படுவது குறித்து எங்கள் கருத்தை நாடாளுமன்றத்தில் தெரிவிப்போம். இவ்வாறு அத்வானி கூறினார்.



# கடவுச்சீட்டு கிடைக்கவில்லை என நீதிமன்றை அணுகினார் வை.கோ!

குடிவரவு அதிகாரிகள் தனது விசாவைத் திருப்பித் தருமாறு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மனுத் தாக்கல் செய்துள்ளார்.

எம்.பி. என்ற முறையில் வைகோவுக்கு சிறப்பு கடவுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. இது 13 ஆவது மக்களவை கலைக்கப்ப்ட நாளன்று காலாவதியாகிவிட்டது.

இந்த நிலையில் 11 மாதமாகும் தனது பேத்தியை மகளிடம் கொண்டு சேர்ப்பதற்காக அமெரிக்கா செல்ல நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்றும் இதற்காகப் புதிய கடவுச்சீட்டை வழங்க குடிவரவு அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் கோரி வைகோ மனு செய்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி ஒரு உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவில் பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தின் வசம் உள்ள காலாவதியாகிவிட்ட சிறப்புக் கடவுச்சீட்டை வைகோவிடம் ஒப்படைக்க வேண்டும்.

வைகோ இதனைக் குடிவரவு அதிகாரிகளிடம் வழங்கவேண்டும். அவர்கள் வைகோவுக்குப் புதிய சாதாரண கடவுச்சீட்டு வழங்கி, அதை பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று உத்தரவிட்டது.

அதன்படி குடிவரவு அதிகாரிகள் வைகோவுக்குப் புதிய சாதாரண கடவுச்சீட்டை விநியோகித்து அதை பூந்த மல்லி நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். இந்நிலையில் ஏற்கனவே காலாவதியாகிவிட்ட சிறப்பு கடவுச்சீட்டின் மூலம் 2009 ஆம் ஆண்டு வரைக்கும் விசா பெற்றிருந்தார் வைகோ. அந்த விசா தற்போது குரவரவு அதிகாரிகளிடம் உள்ளது.

எனவே, அந்த விசாவை தன்னிடம் வழங்குமாறு கோரியும், புதிய கடவுச்சீட்டை தன்னிடம் பூந்தமல்லி நீதிமன்றம் ஒப்படைக்கக் கோரியும் புதிதாக ஒரு மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் வைகோ. இந்த மனுமீதான விசாரணை ஜுன் மாதம் முதலாம் திகதி நீதிபதிகள் மிஸ்ரா, குலசேகரன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வரும் எனத் தெரிகிறது.

## பொலிஸ் நிலையங்களில்

# தமிழ் அதிகாரிகளை நியமிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் அதிகளவில் நியமிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு பரிந்துரைத்திருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அந்த ஆய்வின் பின்னரே அரசாங்கத்துக்கு இந்த யோசனையை முன்வைத்திருக்கின்றது.

இந்த ஆய்வின்போது ஆயுதப் போராட்டங்கள், அனர்த்தங்கள், அசம்பாவிதங்கள் ஆகியவை தொடர்பான பல முறையீடுகளை ஆணைக்குழு பெற்றுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் மனக்கிலேசமின்றியும், அச்சம், தயக்கம், அதிருப்தியின்றியும் தம்காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக அரசாங்க நிறுவனங்களில், குறிப்பாக பொலிஸ் நிலையங்களில் பெருந்தொகையாக தமிழ்பேசும் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்திருக்கின்றது.

இதுதவிரவும், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான சர்ச்சைகள், படையினரது கெடுபிடிகளால் பொதுமக்களது இயல்புவாழ்க்கை பாதிக்கப்படுகின்றமை, படையினர் மத்தியிலுள்ள ஒழுங்கீனங்கள் என்பவை குறித்தும், ஆணைக்குழு தன்னுடைய அறிக்கையில் கவனம் செலுத்தியிருக்கின்றது.

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# சமுர்த்தி மகா சங்கத்தின் அலுவலக திறப்பு விழா நாளை நடைபெறும்

தென்மராட்சி சமுர்த்தி வங்கி மகாசங்கத் திறப்புவிழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரியில் இடம்பெறும்.

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த மகாசங்க அலுவலக திறப்பு விழாவிற்கு - தென்மராட்சி சமுர்த்தி வங்கி மகாசங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆ.இரகுநாதன் தலைமை தாங்குவார்.

பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமாரும், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணனும், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கமும், கணக்காளர் ஜே.கில்பேட்குணமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை திருக்கணித சோதிட நிலைய அதிபர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள், அருட்தந்தை ரி.எச்.வசந்தகுமார் ஆகியோரும் வழங்குவர்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி, சமூக அபிவிருத்தி மன்றினூடாக ஊனமுற்றவர் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(24)

# இலங்கை மீனவர் சங்க பிரதிநிதிகள் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்

எதிர்வரும் யூலை மாத இறுதிப் பகுதியில் இலங்கையிலிருந்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவரின் அத்துமீறல்களால் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்து ஆராயும்பொருட்டு, இலங்கை வந்த இந்திய மீனவர் பிரதிநிதிகள் கடந்த இரு தினங்கள் இலங்கையின் மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பல முடிவுகள் எட்டப்பட்டன. இவை தொடர்பாக மேலும் ஆராயும்பொருட்டே இலங்கை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்தியாவின் நாகபட்டினம், ராமேஸ்வரம், புதுக்கோட்டை முதலான பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளது.

இவர்களது பயணத்துக்கான ஒழுங்குகளை இலங்கை, இந்திய உயர் ஸ்தானிகராலயங்கள் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

## பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை

வேலையற்ற பட்டதாரிகளை அரசாங்கத்துறையில் பொருத்தமான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக தென்மராட்சிப் பிரதேசம் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப்பரீட்சை - அடுத்த மாதம் 7, 8 ஆம் திகதிகளில் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்போது பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டம்பெற்ற சான்றிதழ் (பாடங்கள், வகுப்புடன் சேர்த்து) என்பனவற்றின் மூலப்பிரதிகளுடன் சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குரிய அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

(24)



யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் யாழ். தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் பாடசாலையைப் புரிந்துகொள்ளுதல் செயற்திட்டத்தை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# சட்டவிரோதமான மின்சாரம் பெற்றவர்கள் 60 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 12 பேரிடம் யாழ்.மேலதிக நீதிமன்றம் 60 ஆயிரம் ரூபாவைக் குற்றப்பணமாக அறவிட்டது.

கொக்குவில் மற்றும் கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த இவர்களை கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்த மின்சார சபையினர் -இவர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குறிப்பிட்ட 12 நபர்களும் தமது குற்றத்தினை ஒப்புக் கொண்டதையடுத்து, இவர்களைத் தலா 5 ஆயிரம் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன், இனி வருங்காலங்களில் இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது என யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் எச்சரித்து விடுதலை செய்தார்.

அண்மைக் காலங்களில் கோப்பாய் மற்றும் கொக்குவில் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண தொல்லியல் மையங்களை யுனெஸ்கோ அதிகாரிகள் பார்வை!

யுனெஸ்கோ நிறுவனத்தின் பாரம் பரிய சொத்துக்களைப் பாதுகாக்கும் பிரிவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத் தொல்லியல் மையங்கள் பார்வையிட்டனர்.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒழுங்கமைப்பின் படியே யுனெஸ்கோ நிறுவனத்தின் பாரம்பரிய சொத்துக்களைப் பாதுகாக்கும் பிரிவின் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் நல்லூர்ப் பிரதேசத்திலுள்ள மந்திரிமனை, கோட்டை வாசல், யமுனா ஏரி, நல்லூர் முருகன் ஆலயம் மற்றும் யாழ்.கோட்டை உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக யுனெஸ்கோவினால் நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகவும், முதல் கட்டமாக யாழ். செயலகத்தில் இத் தொல்பொருள் மையங்களால் பாதுகாக்கக்கூடிய தொல்லியல் பாதுகாப்பு அலுவலக மொன்று திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பழமை வாய்ந்த பெறுமதிமிக்க தொல்பொருட்களைச் சேகரித்து, இவற்றைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# இரணைமடுக்குளம் புனரமைக்க 100 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இரணைமடுக்குளம் 100 கோடி ரூபா செலவில் முழுமையாக புனரமைக்கப்படவுள்ளது. நியாப் திட்டம் II இன் கீழ் இதனைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியை உலகவங்கி வழங்க முன்வந்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நியாப் திட்டம் II இற்கான கலந்துரையாடலிலே இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஒரு கிராமத்துக்கு 80 ஆயிரம் ரூபா வீதம் 150 கிராமங்கள் அபிவிருத்தி செய்வதற்கு இந்தக் கலந்துரையாடலில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்படும் 150 கிராமங்களில் வீதிகள், குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் பொது மண்டபங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், கடல்நீர் ஏரிகளால் சூழல் மாசடைதல், நீர் உவர்த்தன்மையடைதல் போன்றவை தொடர்பாக ஆராய்வதற்கும் இந்தத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலைக் கழிப்பறையில் 16 வயதுச் சிறுமி ஒருத்தி பிரசவித்த குழந்தைக்குத் தந்தையென சந்தேகிக்கப்படும் குருநகரைச் சேர்ந்த நபரை, அடுத்தமாதம் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது, யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி. ஸ்ரீநிதிநந்தசேகரன் சந்தேகநபரது விளக்க மறியலை நீடித்துள்ளதாக அறிவித்தார்.

## மணவாளக்கோல திருவிழா

மட்டுவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக்கோலத் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

சங்காபிஷேகமும் தொடர்ந்து உற்சவமும் இடம்பெறும்.

(24)

# வீதியில் கூடும் இளைஞர்களால் போக்குவரத்துக்கு இடையூறு

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் அண்ணா சனசமூக நிலைய பகுதியில் ஒன்றுகூடும் இளைஞர்களால், வீதிப்போக்குவரத்துக்கு பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பிற்பகல் வேளையில் கூடும் இந்த இளைஞர் கூட்டம் -அந்தப் பகுதியில் ஒன்றாக நின்று கூச்சலிடுவதாகவும், வீதியால் செல்வோரை கேலி செய்வதோடு, பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி வருவதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் - இந்த இளைஞர் கூட்டம் இரவு 10 மணிக்குப் பின்னரே கலைந்து செல்வதாகவும் தெரிவித்தனர்.

(ப)

# நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் போதியளவு மருந்துகள் கையிருப்பில் இல்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் போதியளவு மருந்துகள் கையிருப்பில் இல்லாமையினால், நோயாளர்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக, நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை, வைத்திய அதிகாரி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

காலாண்டுக்கு ஒரு தடவையே மருந்து வகைகள் இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றதெனவும், இவை சிலவேளைகளில் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் நோய்கள் காரணமாக முன்கூட்டியே முடிவடையும் நிலை ஏற்படுகிறது.

இந்த நிலையில் மேலதிக மருந்துகள் தேவையென உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கின்றபோதும், அவை உடனடியாக வழங்கப்படுவதில்லை.

இங்கு கடமையில் இருக்கும் வைத்தியர் விடுமுறையில் செல்ல நேரிட்டால், அதற்குப் பதிலாக ஒருவரை நியமிப்பதில்லை எனவும் தெரிவித்தார்.

இதனால், அவசிய தேவைகளுக்குக்கூட விடுமுறை பெறமுடியாமல் இருப்பதாகவும் நோயாளர்களுக்கு திருப்திகரமான சேவைகள் வழங்கமுடியாதநிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (113)

# முருகானந்தன் எழுதிய ஐந்து நூல்களின் அறிமுகம்

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த டாக்டர் எம்.கே.முருகானந்தன் எழுதிய ஐந்து நூல்களின் அறிமுக விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு விபவி கலாசார மையத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தர்மராம வீதி, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் கொறொ கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் வெளியீட்டு விழாவில மு.பொன்னம்பலம், தெ.மதுசூதன், சிதம்பரப்பிள்ளை சிவகுமார், எம்.தேவகௌரி ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

டாக்டர் முருகானந்தனின் "மறந்து போகாத சில", "ஒரு டொக்டரின் டயறியிலிருந்து", "நீங்கள் நலமா", "எடையைக் காத்து நலத்தைப் பேணுங்கள்", "நீரிழிவுடன் நலமாக வாழுங்கள்" ஆகிய நூல்கள் இவ்விழாவில் அறிமுகம் பெறவுள்ளன.

(17)




# ஏதென்ஸ் கனவுகள்

ஏதென்ஸ் 100 மீற்றர் வீர, வீராங்கனை யாராக இருக்கப் போகிறார்கள் என்பதில் உள்ள ஊகங்களுக்கு இதுவரை பங்கமில்லா வகையிலேயே அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் தடகளப் போட்டிகள் முடிவு பெற்றிருக்கின்றன.

மரியன் ஜோன்ஸ் இரண்டு தடவைகள் உலகச் சம்பியன் பட்டம் வென்றவர். 10.99 செக்கன்களில் ஆரம்பம் முதலே முடிவுவரை முதலாவதாகவே ஓடிச் சாதனை படைத்து விட்டார். அதோடு இன்னொரு நிகழ்வான நீளம் பாய்தலில் 7.13 மீற்றர் தாண்டி தங்கம் வென்றுள்ளார். அண்மையில் ஜமெய்க்கா நாட்டின் கிங்ஸ்ரன் நகரில் 100 மீற்றர் ஒட்டத்தில் தங்கம் வென்ற நேரத்தைவிடவும் .05 செக்கன்கள் குறைவான நேரத்தையே இவர் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மொறிஸ் கிறீன் "உறுதிப்படுத்துகிறார்"

சரியான நேரத்தில் சரியான தகுதியை எட்டி இருப்பதாகவே எண்ணுகின்றேன். எனது இலக்கு ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதுதான். அது இப்போதைய பிரதான சிந்தனை என்கிறார் அவர். மரியன் ஜோன்ஸ் தங்கம் வெல்வார் என்பதில் அவரைவிட அவரது ரசிகர்களுக்கு நம்பிக்கை அதிகம். ஆனால், ஒன்று முதல் நான்கு வரையான பதக்கங்கள் எடுப்பார் என்ற நிலையில், எத்தனை எடுப்பார் என்பதை ஊகிப்பதுதான் கஷ்டம்.

இன்னொருவர் மொறிஸ் கிறீன் இவர் லொஸ் ஏஞ்சல் போட்டிகளில் 9.86 செக்கன்களில் 100 மீற்றர் தங்கத்தைத் தட்டிச் சென்றிருக்கிறார். இந்த வருடத்தில் நான் பங்குபற்றிய நான்காவது ஓட்டம் இது. எனவே, இது எனக்குத் திருப்திதான். கலிபோர்னியா எனது சொந்த இடம். இங்கு தங்கம் வென்றதில் எனக்கு மகிழ்ச்சியே என்றவர், என்றென்றைக்கும் முதன்மையானவர் மொறிஸ் கிறீன் தான் என்கிறார் தன்நம்பிக்கையுடன்.

இதேவேளை, தற்போது உலக சாதனை நேரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பவர் ரிம்மொண்ட்கொமரி. மெக்சிக்கோ சிற்றியில் நடைபெற்ற தடகளப் போட்டியொன்றில் இவரால் பெற முடிந்தது ஆறாவது இடம் மட்டுமே. இந்தநிலை இவருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இவரும் ஏதென்ஸ் கனவுகளுடன் வாழ்பவர்.

ஆனால், மொறிஸ் கிறீனுடன் ஒப்பிடும்போது, இவரது கனவு கனவாகத்தான் போகும்போலத் தெரிகிறது.

- நிமலா -

# மண்ணை அள்ளித் தன் தலையில்

பிரித்தானியாவின் 100 மீற்றர் குறுந்தூர ஓட்ட முதற்தரவீரர் என்றால் அவர் டுவெய்ன் சேம்பர்ஸ் தான். கடந்த பாரிஸ் சம்பியன் சிப் போட்டிகளில் பிரித்தானியா 4 x 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற முக்கிய காரணமே இவர்தான். இந்தப் பலம் வாய்ந்த அஞ்சலோட்ட அணியின் இப்போதைய துக்கம் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கம் பெற இயலுமா என்பதற்கும் அப்பால் போகிறது.



"ஏதென்ஸ் சிரிக்கும்"

அதாவது டுவெய்ன்ஸ் சேம்பர்ஸ் ஊக்க மருந்துப் பாவனைக் குற்றச் சாட்டில் நிரூபிக்கப்பட்ட இவரை இழந்த அணி தற்போது, உலகத்தரத்தில் இரண்டாவது தரத்தில் இருந்து பதினைந்தாவது தரத்திற்கு இறங்கியுள்ளது. அதாவது உலகின் முதல் பதினாறு தரங்களுக்குட்பட்டவர்கள் மட்டுமே ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெறுவார்கள்.

இவர்களின் தரம் மேலும் முன்னேற இடமுண்டா. என்பதை அடுத்த மாதம் போலந்தில் நடைபெறும் ஐரோப்பியக் கிண்ணப்போட்டி மற்றும் பிரித்தானிய கிரோன்பிரி போட்டிகள் தான் தீர்மானிக்கவேண்டும். இங்கும் தரம் உயரவில்லையாயின் ஏதென்ஸ் போட்டிகளில் பிரித்தானியாவின் அஞ்சலோட்ட அணி (4x100மீ, 4x200மீ) ஒன்று இல்லை என்ற நிலை உருவாகிவிடும். பிரித்தானிய அணி பலம் குறைந்தது என்று கூறிவிடமுடியாது. ஆனால் எதிர்பார்க்கும் இலக்கை அடையக்கூடியதாக இல்லை என்றே தெரிகிறது. எல்லாம் சேம்பர்சின் ஊக்க மருந்துப் பாவனையால் வந்த வினை. தற்போதைய பிரித்தானிய அணி டரன் கம்பெல்மார்லன் டெவோனிஷ் - கிறிஸ்கியன் மல்கம்-மார்க் லூயிஸ் பிரான்சிஸ் ஆகியோரைக் கொண்டுள்ளது.

- பிரியா -

# நியாயமான ஆசை

சர்வதேச உதைபந்தாட்டம் என்றால் உலகின் கண்களில் உடனடியாகப்படுபவை ஐரோப்பாவும்; தென் அமெரிக்காவும்தான். ஐரோப்பாக் கண்டத்தைப் பொறுத்தவரை 1966 ஆம் ஆண்டு பிரித்தானியா உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தியது. இதன் பின்னர் இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகள் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தியிருந்தன. இது ஒருபுறம் இருக்க, 2002 இல் ஜப்பான், தென்கொரிய நாடுகள் இணைந்து உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தின. 2006 இல் ஜேர்மனி நாட்டில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

2010 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடைபெறும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்டது. அடுத்த **FIFA** இன் ஒழுங்கு முறையின்படி 2014 இல் தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கலாம்.

அப்படியாயின் 2018 இல் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஐரோப்பா நோக்கிவரும். இங்குதான் பிரித்தானியா கண்வைக்கிறது. எப்படியாவது 2018 இல் உலகக கிண்ணப் போட்டிகளை பிரித்தானியாவில் நடத்திவிட அனுமதிபெற பிரித்தானிய விளையாட்டுத்துறை அமைச்சர் ரிச்சட் கெபோன் இப்பொழுது வியூகங்கள் வகுக்கத் தொடங்கிவிட்டார்.

இது மட்டுமல்ல 2004 இல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன. அப்படியானால் 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை பிரித்தானியாவில் நடாத்திவிட அனுமதியைப் பெற்றுவிட வேண்டுமென்று துடியாகத் துடிக்கிறது பிரித்தானியா.

## நியாயமோ புரியவில்லை

இலங்கையின் கிரிக்கெட் தெரிவாளர்கள் சபை புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஏழு பேர் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். முன்னைய தெரிவுக்குழு அங்கத்தவர்கள் லலித் களுபெரும மட்டுமே புதிய குழுவில் சேர்க்கப்பட்டிருக்கிறார். முன்னாள் டெஸ்ட் வேகப்பந்து வீச்சாளர் அஸந்த டீமெல் தலைவர். ஏனைய அங்கத்தவர்கள் கே.எம்.நெல்சன், எஸ்.அஸ்கர்அலி, முன்னாள் டெஸ்ட் சுழல் பந்துவீச்சாளர் டொண் அருணசிறி மற்றும் இன்னும் இரண்டு முன்னாள் டெஸ்ட் வீரர்கள் ரஞ்சித் மதுருசிங்கவும், பிரேமோதய விக்கிரமசிங்கவும். வெளியேறும் முன்னாள் தெரிவாளர்கள் ஆஷ்லிடிசில்வா மற்றும் றொஜர் விஜயசூரிய.

மூன்று பேர் கொண்ட சபை தற்போது ஏழுபேர் கொண்டதாக வீங்கிப் பெருத்துள்ளது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த முன்னாள் இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க, நான்கு அல்லது ஐந்துபேர் இருந்தால் நன்றாக இருக்கும்.

இப்போது இந்த ஏழு பேருடன் இன்னும் நாலுபேரைச் சேர்த்துக் கொண்டால் இவர்களே ஒரு அணியாக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடலாம் என்று நக்கலாகக் கூறியுள்ளார். அத்தோடு, தற்போது நானும் அங்கம் வகிக்கும் அரசு ஆட்சியில் இருக்கிறது. இப்படியான செயற்பாடுகள் கிரிக்கெட்டைப் பாதிககுமாயின் நாம் எல்லோருமே பொறுப்பேற்க வேண்டுமென்கிறார்.

அது சரி, ஆட்சி மாறியதும் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும், தங்கள் ஆட்களைப் போடவேண்டுமென்று இவ்வளவு அவா ஏன்?

## சற்றுக் கவனியுங்கள்

இரட்டை அடுக்கு கிரிக்கெட் ஆட்டங்கள் பற்றி ஷேன்வோண் பேசுகிறார். ரிக்கி பொன்ரிங் இது பற்றிக் கூறிய கருத்தைத் தான் ஆதரிப்பதாக இவர் கூறுகிறார். இதன் படி பலவீனமான அணியுடன் டெஸ்ட் ஆட வேண்டியநிலை பலமான அணிகளுக்கு ஏற்படாது. சிம்பாப்வே, பங்களாதேஷ் போன்ற அணிகள் பலம் குறைந்த அணிகள் என்ற வகையில் இவர் அடக்குகிறார்.

இவரின் கருத்துப்படி ஆறு அல்லது ஏழு நாடுகள் முதல் தரத்துக்குள் அடங்கும். ஏனையவை இரண்டாம் தரத்துக்குள் அடங்கும். இந்த விடயம் பற்றிக் கங்கூலியும் பேசியிருந்தார். இதில் நியாயம் இருப்பது போலவே தெரிகிறது. இருந்தாலும் நடைமுறைச் சாத்தியம் எந்தளவு என்பது பெரியதொரு கேள்விக் குறிதான். உலக உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை அங்கு அஸ்தமிக்கும் அணிகள் அனைத்துமே சமவலுவுள்ளவை என்பதை அவதானிக்கலாம்.

ஆனால், கிரிக்கெட்டைப் பொறுத்தவரை அப்படியல்ல. அத்தோடு நிச்சயமற்ற தன்மைகள் நிறைந்த கிரிக்கெட்டில் ஒரு தொடரில் முதன்மை பெறும் அணி, அடுத்துவரும் தொடரில் படுதோல்விகளைச் சந்திக்கும்.

உதாரணம் இன்றைய மேற்கிந்தியத் தீவுகள் அணி. இவர்களை எந்தப் பிரிவுக்குள் அடக்குவது? இப்படியான பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன.

எனினும், எதிர்காலத்திலாவது டெஸ்ட் அந்தஸ்து என்று கொடுக்கும்போது ICC நிரம்பச் சிந்திக்கும் நிலையொன்று தற்போதைய பிரச்சினைகள் உருவாக்கி இருப்பது தெரிகிறது.

- நந்தா -

# இவர் என்றும் ஆயிரம் பொன்

எதிர்பார்த்தது போலவே பிரெஞ் ஓபன் போட்டிகளில் மாட்டீனா நவ்ரடிலோவா அம்மையார் தன்னைவிட பத்தொன்பது வயது குறைநத 28 வயதான ஆர்ஜென்ரீன நாட்டின் ஜீஸேலா டுல்கோ எனும் வீராங்கனையிடம் தோற்றுப்போய்விட்டார். இதுகூட மார்ட்டீனா அம்மை யாரின் கிரீடத்தில் ஒரு வைரம்தான்.



மார்ட்டீனா அம்மையார் "இளமையென்றால் என்ன"

அம்மையார் கூறுகின்றார் இதுவே நான் ரெனிஸ் போட்டிகளில் கலந்து கொள்ளும் இறுதி வருடமாக இருக்கும். அடுத்தடுத்த வருடங்களிலும் என்னால் கலந்து கொள்ள முடியாதென்பதல்ல இதற்கு அர்த்தம். இனிமேல் காணும், போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இதோடு நிறுத்திக்கொள்வோம் என்கிறார். இந்த வருடத்துடன் என்று அவர் கூறியதன் பிரதான தாற்பரியம் இந்தமுறை விம்பிள்டன் போட்டிகளில் கலந்துகொண்டபின் ஓய்வு பெறுதல் என்ற கருத்தைப் பெறும்.

அம்மையார் தனது இளம் பிராயத்தில் வென்ற 18 GRAND & LAMS களில் 7 GRAND & LAMS விம்பிள்டன் வெற்றிகளாகும். விம்பிள்டன் போட்டிகளுக்குத் தன்னைத் தயார்படுத்தும் வேலைகளில் தற்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற இவர், தனது உடற்தகுதி பற்றிப் பெரும் கரிசனை காட்டுகிறார். தொடரான விளையாட்டின்மூலம் தனது தகைமையை மெருகூட்டுவதே அவரின் எண்ணம்.

அம்மையார் ரெனிஸ் உலகில் வென்ற கிண்ணங்கள் ஒன்றோ பத்துப் பதினைந்தோ அல்ல. 167 களில் ஒற்றையர் பட்டங்கள் இரட்டையர் பட்டங்கள் 173. அது ஒரு புறம் இன்னொரு புறம் 2002 தனது 46 ஆவது வயதில் இளைய வீராங்கனையொருவரைத் தோற்கடித்தார். 2003 இல் இந்தியாவின் லியாண்டர் பயசுடன் இணைந்து கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் விம்பிள்டன் மற்றும் அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகளில் வெற்றிக் கிண்ணம் பெற்றார். இப்படியான அதீத திறமைபெற்ற ஒரு வீராங்கனையைப் பல தசாப்தங்களுக்கு ஒருமுறைதான் காணலாம். இதனைத் தான் இவர் மைதானத்தில் வெல்கிறாரா, தோற்கிறாரா என்பது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை எங்கே மார்ட்டீனா அம்மையார் மைதானத்தில் இறங்காமல் போய் விடுவாரோ என்றுதான் அங்கலாய்ப்பார்கள். இந்த நூற்றாண்டின் துருவ நட்சத்திரம் மார்ட்டீனா அம்மையார்.

- லலீ -

# அலட்டலுக்கு அளவில்லை

வெளியேற்றப்பட்ட வெள்ளை இன வீரர்களுக்கும், சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகிகளுக்கும் இடையிலான சர்ச்சை முடிவுக்கு வரும்வரையில் சிம்பாப்வேயுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை மற்றைய நாடுகள் புறக்கணிக்க வேண்டுமென்று முன்னாள் சிம்பாப்வே அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். இங்கிலாந்து சிம்பாப்வேக்கு விஜயம் செய்யுமாக இருந்தால், அது சிம்பாப்வேயில் நடந்து கொண்டிருப்பவற்றை இங்கிலாந்து ஏற்றுக்கொண்டதாகத் தான் கருதவேண்டியிருக்கும் என்கிறார் அவர்.

சிம்பாப்வேயில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத வரை எந்த நாடும் சிம்பாப்வேக்கு வரக்கூடாது. அது இங்கிலாந்து அல்லது அவுஸ்ரேலியா அல்லது பங்களாதேஷாக இருக்கலாம் என்கிறார் அவர்.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான போட்டிகளில் பங்குகொள்ள, வெள்ளை இன வீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட இறுதி அவகாசமும் முடிவடைந்து, வெள்ளை இனவீரர்கள் அணியிலிருந்து முற்றும் முடிவுமாக நீக்கப்பட்ட பின்னர், ஹீத்ஸ்ரீக் இந்தக் கருத்தை கூறியுள்ளார்.

எமக்கும் சிம்பாப்வே கிரிக்கெட் தெரிவுக் குழுவுக்கும் அதிருப்தி - முன்னதாகவே பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரின் போதே ஆரம்பித்துவிட்டது என்று கூறியுள்ள இவர் - எல்லோருக்கும் சமனான ஒரு வாய்ப்பு கிடைக்கும் ஒரு ஆரோக்கியமான சூழலிலேயே நாம் கிரிக்கெட் விளையாட விரும்புகின்றோம். அது வெள்ளை இனத்தவராக இருந்தாலென்ன, கறுப்பு இனத்தவராக இருந்தாலென்ன. அதல்ல பிரச்சினை என்கிறார்.

இலங்கை அணியிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட சிம்பாப்வே இளம் வீரர்கள் அவுஸ்ரேலியாவிடமும் தோல்விதான் காணப்போகின்றார்கள். இது அவர்களின் மனோநிலையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று அச்சப்படுகின்றார் அவர். தற்போது வெள்ளை இனவீரர்கள் தம் குமுறலை ஐ.சி.சிக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஐ.சி.சி சிம்பாப்வே கிரிக்கெட் தரம் பற்றியும் கலந்துரையாடவுள்ளது.

இது ஒருபுறம் இருக்க அவுஸ்ரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் கிரெக் சப்பல் முன்பு 70 களில் தென்னாபிரிக்காவைக் கிரிக்கெட் அதிகாரிகள் தடைசெய்த வழியில் தற்போது சிம்பாப்வே தடைசெய்யப்பட்டாலென்ன என்ற வகையில் தன் மேலான கருத்தையும் எடுத்தியம்பியிருக்கின்றார்.

ஆனால், சிறுபான்மை இன வெள்ளை இன வீரர்கள் பெரும்பான்மை மக்களின் நாட்டில் கிரிக்கெட் மேலாதிக்கம் ஒன்றை நிலை நாட்ட முயற்சிப்பதாக சிம்பாப்வே கருதுகிறது. இது அரசியலும் கிரிக்கெட்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த கூர்மையான பிரச்சினை. இது பற்றிய விடயத்தில் ஐ.சி.சி இன்னும் மதில் மேல் பூனையாகத் தான் இருக்கின்றது.

நிலைமை அப்படியிருக்க கிரெக் சப்பல் அநாகரிகமாக தேவையற்ற கருத்தை முன்வைக்கின்றார். நடுவுநிலை நின்று இரு பகுதியையும் ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர முயற்சிக்கலாம். அதை விடுத்து அசிங்கம் அசிங்கமாக வாந்தி எடுத்துக் கொண்டு...!

அவுஸ்ரேலியர்களும் இப்ப எல்லாவற்றிலும் தம் கருததை சொல்ல முயற்சிக்கிறார்கள். ஆனால், அந்தக் கருத்துக்கள் மற்றவர்களை அருவருப்பூட்டுவதாக இருப்பதுதான் துரதிஷ்டம்.

சிம்பாப்வே கிரிக்கெட் சர்ச்சையைப் பொறுத்து, இன்னொரு கோணத்தை விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். வெள்ளை இனச் சிறுபான்மை மக்கள் இன்றும்கூட கறுப்பின பெரும்பான்மை மக்களை கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்து நசுக்கவே முயற்சிக்கின்றார்கள் என்று சிம்பாப்வே மக்களில் அநேகர் கருதுகின்றார்கள் என்பதே அது. இப்படியான ஒரு வில்லங்கமான நிலையில் சரியான ஆயவுகள் புரிதல்களின்றி அரைவேக்காட்டு அபிப்பிராயங்கள் தெரிவிப்பதில் இவர்களுக்கென்ன ஆசையோ தெரியவில்லை.



கிரெக் சப்பல் "மனசெல்லாம் கறுப்பு"

- ஜெயா -

# மெருகுபெறும் பாலர் அணி




தைபு "அச்சமில்லை"

உலகச் சம்பியனான அவுஸ்ரேலிய அணிக்கும் சிம்பாப்வே அணிக்குமிடையில் இடம்பெறவிருந்த டெஸ்ட் போட்டிகள் ரத்துச்செய்யப்பட்ட நிலையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் இரண்டு போட்டிகளில் வென்றதன்மூலம் தொடரைக் கைப்பற்றியுள்ள அவுஸ்ரேலிய அணி மூன்றாவது போட்டியையும் வெல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எம்மை யாரும் வெல்லமுடியாது என சவால் விடும் அவுஸ்ரேலியர்களைப் பொறுத்தவரையில் சிம்பாப்வே அணியுடனான ஒருநாள் போட்டி வெற்றிகள் ஒன்றும் பெருமிதப்படக்கூடியவை அல்ல.

உலகச் சம்பியனான அவுஸ்ரேலிய அணி - குழந்தைகள் அணியான சிம்பாப்வே அணியினை துவட்டி எடுக்கும் என்றே அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், சிம்பாப்வேயின் குழந்தைகள் - இப்போட்டியின்போது, தமது திறமையால் அவுஸ்ரேலிய அணியின் வெற்றியின் வெறுமதியை வலுவிழக்கச் செய்துள்ளனர்.

முதலாவது போட்டியில் உலகின் சிறந்த பந்து வீச்சாளர்களைக்கொண்ட அவுஸ்ரேலிய அணியால் அனுபவமற்ற சிம்பாப்வே அணியை முழுமையாக ஆட்டமிழக்கச் செய்யக்கூட முடியவில்லை. அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்ட சிம்பாப்வே அணியினர் ஒன்பது விக்கொட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றமை சிம்பாப்வே அணியின் தற்போதைய நிலையில் போற்றப்படவேண்டிய விடயமாகும்.

சிம்பாப்வே அணியுடனான முதலாவது ஆட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த பொண்டிங் சிம்பாப்வே அணி வீரர்கள் 50 ஓவர்களும் தாக்குப்பிடித்துத் துடுப்பாடியது வியப்பை அளித்ததாகக் கூறியுள்ளார்.

சிம்பாப்வேயுடனான இரண்டாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணியினர் 139 ஓட்டங்களால் வெற்றி பெற்றாலும், அவுஸ்ரேலிய அணியினர் எட்டு விக்கெட்டுக்களை இழந்தே 323 ஓட்டங்களைப் பெற்றனர்.

உலகக்கிண்ண இறுதிப்போட்டியிலும், TVS கிண்ண இறுதிப் போட்டியிலும் இந்திய அணிக்கு எதிராக 350 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்தபோதும்கூட எட்டு விக்கெட்டுக்கள்வரை சரியவில்லை.

ஆனால், சிம்பாப்வேயின் அனுபவம் குறைந்த பந்துவீச்சாளர்கள் அவுஸ்ரேலிய வீரர்களை ஆட்டங்காணவைத்துள்ளனர்.

இவற்றைவிட இலங்கை அணியுடனான ஒரு போட்டியில், 35 ஓட்டங்களைப் பெற்ற சிம்பாப்வே அணியை அவுஸ்ரேலிய அணியினரால் அவ்வளவுக்கு கட்டுப்படுத்த முடியவில்லை. அதே சமயம் சிம்பாப்வே அணிக்கு எதிராக அதிகூடிய ஓட்டங்களையும் அவுஸரேலிய அணியினரால் விக்கெட் இழப்பின்றி பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, அவுஸ்ரேலிய அணியினர் இந்தப் போட்டியில் சோபிக்கவில்லை என்பது தெளிவாவதுடன் சிம்பாப்வே அணியின் திறமைகள் வளர்ந்து செல்வது துல்லியமாகின்றது.

- லெஸ்லி-

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. சில தினங்களுக்குமுன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற இங்கிலாந்து வீரர் யார்?
02. 2003 பிரெஞ் ஓபன் மகளிர் சாம்பியன், இந்தமுறை ஆரம்பத்திலேயே தோற்றுவிட்டார். அவர் யார்?
03. லொஸ் ஏன்ஜல்ஸ் தடகளப் போட்டிகளில் ஆண்கள் 100 மீற்றர் தங்கம் வென்றவர் யார்?

**விளையாட்டுப் புதிர் - 13**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..............................................................

முகவரி:- ..............................................................

01.
02.
03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 03.06.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

## விளையாட்டுப் புதிர் இல. 12 இன் விடைகள்

1) தென்னாபிரிக்கா.
2) வட்மோர்.
3) அவுஸ்ரேலியா எதிர் சிம்பாப்வே.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 13, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

**பரிசு பெற்றவர்**
ச. தயானந்தன்
பெரிய பளை
பளை.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

# இப்போதே வளையுங்கள்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினர் சில சில வேளைகளில் நல்ல நல்ல விடயங்கள் பற்றியும் சிந்திக்கின்றனர். அதனை எல்லாக் கட்டுப்பாட்டுச் சபைகளும் பின்பற்றினாலும் நன்றாகத்தான் இருக்கும். தற்போது சட்டபூர்வ முறையில் பந்து வீசும் பாகிஸ்தானின் எல்லா மட்ட கிரிக்கெட் வீரர்கள் பற்றியும் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சஹாரியர்கான் ஆரம்பத்திலேயே பந்துவீச்சு முறையை வீரர்களிடம் நேர்சீர்செய்து கொள்ளும் பொறுப்பை முதன்மையான நடுவர்களிடம் விடவேண்டும் என்று கேட்டுள்ளார்.

தான் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகவும், தனது அனுபவத்தில் கழக மட்ட மற்றும் முதற்தர கிரிக்கெட் ஆட்டங்களில் தான் அவதானித்த பல பந்துவீச்சாளர்கள் பிழையான முறையில் பந்து வீசுவதை அவதானித்திருக்கிறேன்.

அது அவர்கள் வேண்மென்றே செய்யும் காரியம் இல்லை என்றும், சர்வதேச பந்து வீச்சு சட்ட விதிகள் பற்றி அவர்களின் தெளிவின்மையே அதற்குக் காரணம் என்றும் தான் உணர்ந்துள்ளதாக இவர் எடுத்துக்காட்டியுள்ளார்.




சாபிர் அகமட் "இவரும் பிழையாம்"

படிப்படியாகத் தம் குறைபாட்டுடனேயே வளர்ந்து வந்து சர்வதேச நிலையில் முறையற்ற பந்துவீச்சாளர்கள் என்று சுட்டிக்காட்டப்படுவதும், அதற்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது தாமதத்தின் காரணம்தான் என்றுகூறும் அவர் - உடனடியாகவே இந்த விடயத்தில் செயற்படவேண்டும் என்கிறார்.

இல்லாது போயின் சர்வதேச நிலையில் தமது நாட்டுக்கு ஒரு சங்கடமான நிலையை உருவாக்கும் நிலையே காணப்படும் என்கிறார்.

இதில் மிகுந்த ஆழமான உண்மை பொதிந்து கிடக்கிறது. அத்தோடு பாடசாலை மட்ட, கழக மட்ட, முதற்தர மட்டத்தில் எந்தளவு தூரம் பட்டறிவும் நவீன சட்டதிட்டங்களையும் கரைத்துக் குடித்த பயிற்றுநர்கள் இருக்கிறார்கள் என்பதும் ஒரு கேள்விதான்.

இலங்கை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பொறுத்து (எமது பிராந்தியம் என்றவகையில்) இந்தக் கேள்வியில் நியாயம் இல்லை என்று யாரும் மறுத்து விடமுடியாது.

எனவே, பாகற்கொட்டை போட்டால் சுரைக்கொட்டையாக முளைக்கும் என்றாற் போல, பானையில் இருப்பது தானே அகப்பையில் வரும் என்பதுபோல குறைபாட்டுடன் தொடரும்போது குறைபாட்டிலேயே முடிவடையும் என்பதும் உண்மை.

எனவே, மிக உயர்ந்த தொழில் நுட்பம் படிப்படியாக கிரிக்கெட்டை விழுங்கிக்கொண்டிருக்கும் இந்த நிலையில் தொடக்கத்தில் இருந்தே எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

அதற்கு நிறைந்த பொருளாதார வசதி, பட்டறிவு நிறைந்த ஆளணியினர், அரச அனுபவம் என்று நிறைய விடயங்கள் ஒன்றிணைய வேண்டும். இவையெல்லாம் அவ்வளவு சுலபமா?

- கலா -

செய்திக்கட்டுரை

சாரணன்

# யாழ். இந்து மாணவர்களின் வனப்பாசறை நிகழ்வு!

உலக சமுதாயத்திலுள்ள உன்னதமான இயக்கங்களில் சாரணிய இயக்கம் பெருமையும், சிறப்பும் வாய்ந்தது. இள்மையில் இருந்தே ஒழுக்கம் ஒம்பும், உயர்பண்பை உலகளாவிய ரீதியில் வளர்க்கின்ற ஒரே இயக்கமும் இதுவே.

சாரணர்களின் வாழ்வியல் அணுகுமுறைகள் அழகான சமுதாய உருவாக்கத்துககு துணைபுரிவன. அந்த வகையில் சாரணர்கள் - சாரணர்களின் விழா பயிற்சிப் பாசறைகள் என்பன குறிப்பிடத்தககவை.

சாரணர்களின் வரலாற்றிலே வனப்பாசறை என்பது மிகவும் அவசியமானதொன்று. யுத்தமேகம் சூழ்ந்த ஈழப்பூமியில் நீண்டகாலமாக சாரணியச் செயற்பாடுகளின் ஓர் அம்சமான வனப்பாசறைப் பயிற்சி கேள்விக்குரியதாகியது.





சுமார் 25 வருடங்களின் பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நான்காவது சாரணர் குழு - வன்னிப் பெருநிலப்பரப்பில் மல்லாவிப் பகுதியிலுள்ள வவுனிக்குளத்தில் இந்த மாதம் பத்தாம் திகதியிலிருந்து 7 நாட்கள் வரை நடத்திய வனப்பாசறை சிறப்பிற்குரியதொன்றாகும்.

இந்த வனப்பாசறையில் 30 சாரணர்களும், 7 பயிற்றுவிப்பாளர்களும் சில ஆலோசகர்களும் கலந்து கொண்டனர்.

இளமையிலிருந்தே ஒழுக்கம், அன்பு, சகோதரத்துவம், சமயப்பற்று, தேசாபிமானம், கட்டுப்பாடு, துணிவு, பிறருக்கு உதவுதல் முதலிய பல மனப்பான்மைகளை ஒருவன் சாரணியத்தினால் வளர்க்க முடியுமெனினும், தனிமனிதன் தனிமனிதனாக தனது வாழ்வுச் சக்கரத்தை உருட்டுவதற்கான பயிற்சியை, அனுபவப் பகிர்வை - வனப்பாசறையே அவர்களுக்கு வழங்குகின்றது. வனப்பாசறையில் அவன் பெறுகின்ற அனுபவங்கள் வித்தியாசமானவை.

இருள் நிறைந்த காடுகளின் மத்தியில், திசைகள் தெரியாத இடததில் கொடிய விலங்குகளின் பிடியில் இருந்து தப்பி பாசறை அமைத்து உயிர் வாழ்தல் என்பது தனி மனிதன் துணிவுக்கான ஒரு சவாலாகும். இந்தச் சவாலை மாணவ நிலையில் இருக்கின்ற சாரணர்கள் வெற்றி கொள்கின்றனர்.

வனப்பாசறையில் வனவியல் அடையாளங்கள், அந்த அடையாளங்களைப் புரிதலினூடாக சாரணர் அறிந்து கொள்ளும் செய்திகள் அவன் தொடர்ச்சியான அவனது செயற்பாடுகள் வனத்திலே இருக்கின்றபொழுது, வைத்திருக்கின்ற மிகக் குறைவான உணவினை குறிப்பிட்ட காலத்துக்கு ஏற்றவாறு பகிர்ந்து உண்ணுதல், தாம் வாழும் குறுகிய காலத்துக்கேற்ப வாழ்வியல் சுற்றாடலை உருவாக்கிக் கொள்ளுதல் என்பவற்றை பயிற்சியில் ஈடுபடும் ஒவ்வொரு சாரணனும் நன்கு அறிந்திருப்பான். அவனுக்கு வகுக்கப்பட்ட கடமை, அவனது பொழுதுபோக்கு, அவனது நோக்கு முதலியவற்றை கொண்டமைந்த ஒரு தனி மனித வாழ்க்கைக்கான நேர அட்டவணையை சாரணியத்தில் இருக்கின்ற ஒவ்வொருவனுக்கும் வழமையாக்கிவிடும்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்கள் மேற்கொண்ட வனப்பாசறை - ஆபத்திலிருந்து மீளுதல், தனிமனித வாழ்வியல், தள ஒழுங்கமைப்பு தனது தேவைளைத்தானே பூர்த்தி செய்தல் முதலியவற்றுக்கான பயிற்சிகளை வழங்கியது.

இந்தச் சாரணர் பயிற்சிப் பாசறையில் செஞ்சோலையைச் சேர்ந்த 57 சாரணர்களும், 6 ஆசிரியர்களும், பாண்டியன்குளத்தைச் சேர்ந்த 10 சாரணர்களும், யாழ்.இந்து சாரணர்களிடம் பயிற்சி பெற்றனர். இந்தப் பயிற்சிப் பகிர்வு யாழ். இந்து சாரணர்களைப் பொறுத்தவரையில் முக்கியமான ஒன்றாகும்.

இந்த வனப்பாசறையை மாணவர் அமைப்புகளும், பொது சன அமைப்புகளும், அரசியற்துறையினரும் பார்வையிட்டனர். ஏனைய பாடசாலை மாணவர்களும் பழைய சாரணர்களும் யாழ். இந்துச் சாரணர்களின் இந்த வனப்பாசறையை பார்வையிட்டனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை துணிவு மிகுந்தவர்களாக உருவாக்க இத்தகைய வனப் பாசறைகளுக்கு அனுப்புதல் சிறந்தது. அறிவியல் வளர்ச்சியில் உடைந்து கொண்டிருக்கும் கூட்டுறவு வாழ்வியல் இதன் காரணமாக மேலெழும் தனிமனித வாழ்வுக்கு வழி வகுக்கின்றன.

இதனால் பலர் தனிமை வாழ்வை மேற்கொள்கின்றனர். இந்த வாழ்வின் போது, தமது தேவைகளை தாமே நிறைவேற்றவும், ஆபத்திலிருந்து தம்மைப் பாதுகாக்கவும் இந்தப் பாசறை வழிசமைக்கும்.

எதிர்காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தனிமனித வாழ்வில் சிறந்தோங்கி சமுதாயத்தை வழிப்படுத்த அவர்களை சாரணியத்தில் இணைத்து வனப்பாசறைக்கு அனுப்புதல் வேண்டும். யாழ். இந்துச் சாரணியரின் வனப்பாசறை யாழ்ப்பாணத்தின் ஏனைய சாரணர்களுக்கு ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்தது எனக் கூறின் அவை மிகையாகாது.

மக்கள் முகம்

பட்டனைந்து

# கிராமங்களின் முன்னேற்றத்துக்கு குருநகரில் ஒரு முன்மாதிரி!

**குருநகர், முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் முன்மாதிரியை ஏனைய கிராமங்களும் பின்பற்ற வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. எமது தமிழ்ச் சமூகத்தில் புதிதாக எங்கிருந்தோ வந்து தொற்றிக்கொண்ட சல நடைமுறைகள் எம்மை மிக விரைவில் ஒரு சமூகச் சீரழிவுக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.**

**அதற்கு முன்பாக அணைகட்ட வேண்டிய தேவையை உணர்ந்து ஐக்கிய முன்னணியினர் வெளியிட்டு வைத்திருக்கும் "புதியதோர் சமுதாயத்ன் காண எழுவோம்" என்னும் 12 பக்கப் பிரசுரத்திலிருந்து....**

### மாணவர்கள் குடியிருப்பாளர்கள் நலன் பேண ஒலிபெருக்கி பாவித்தல்

(1) மரண அறிவித்தல், சங்க அறிவித்தல்கள் ஆகியன இரவு 9 மணியுடன் நிறுத்தல்.

(2) பாடசாலை மற்றும் ஆலய சுற்றாடல்களில் பாட, வழிபாட்டு நேரங்களில் ஒலிபரப்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

(3) தேனீர்க்கடைகள், வீடியோ, ஓடியோ, ஐஸ்கிறீம் வாகனங்கள் இரவு 7 மணிக்குப் பிற்பாடும் -

கொண்டாட்டங்கள் நடைபெறும் வீடுகளில் இரவு 9 மணிக்கும், சனிக்கிழமைகளில் மட்டும் இரவு 10 மணிக்கும் பிற்பாடு பாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

(4) வீடியோ நிலையங்களில் குழுமி நின்று பார்க்கும்விதமாகப் படங்கள் காட்சிப்படுத்தக்கூடாது.

### பயணிகள், சமுதாய நலன் கருதி

பிரதான வீதிகளின் மருங்குகளில் காட்ஸ் கூட்டம், கரம்போட், டாம் விளையாடுவது - சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை வீதியை மறித்து நிறுத்தி வைத்தல் -

தகாத வார்த்தை பிரயோகங்கள், கேலி செய்தல், சீக்காய் அடித்தல், கூக்காட்டுதல், பெண்களிடம் சேட்டை புரிதல் -

வீதிகளில் வீடியோ படங்கள் காட்டல், சிறுவர்கள் கிரிக்கெட், கிட்டி அடித்தல் - சந்திகளில் கூடி மது அருந்துதல், வீதிகளில் வலைகளைக் காயப்போடுதல், கொண்டாட்டங்களின்போது ஐக்கிய முன்னணியினரிடம் அனுமதி பெறாமல் போடப்படும் பந்தல்கள் ஆகியன தடைசெய்யப்பட்டுள்ளன.

### அத்துமீறும் குடியேற்றங்கள்

(1) வீட்டுக்காரர் வீதியின் ஓரங்களை கபளீகரம் செய்வதும், ஏற்கனவே எடுத்துக்கொண்டவர்கள் மீது நகரசபை நடவடிக்கை எடுப்பதும் -

(2) விளையாட்டு மைதானம், புதிதாக குப்பை போட்டு நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் இடங்களில் அத்துமீறல் செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(3) பஸ் தரிப்பு நிலையங்களையும், பொதுக் கேணிகளையும் அசுத்தப்படுத்தல், சேதமாக்குதல், தமது தனிப்பட்ட தேவைகளுக்காக ஆக்கிரமித்தல் தடைசெய்யப்பட்டுள்ளன.

### பொது நன்மை கருதி

(1) கள்ளு, கசிப்பு, கஞ்சா விற்பனை செய்வது குற்றமாகும்.

(2) பொது இடங்களில் குப்பை போடுதல், வடிகால்களில் தடைசெய்தல், குப்பை கூழங்களை போடல் மற்றும் குருநகருக்கு தேவை கருதி வந்துபோகும் பிற ஊர் மக்கள் மீது வன்முறை செய்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளது.

(3) மாணவரது கல்வி முன்னேற்றத்தில் தடை விளைவித்தல், மாணவிகள் மீது வன்முறை செய்தல், சந்திக்குச் சந்தி முரண்பட்ட அட்டகாசத்தில் ஈடுபடல் ஆகியனவும் -

மலசல கூடங்களும், மலக்குழிகளும் அமைக்கையில் வடிகால்களுக்கு தொடர்பு செய்தல், போக்குவரவு வீதிகளின் மருங்குகளில் மலக்குழி தோண்டல் என்பனவும் தடைசெய்யப்பட்டுள்ளன.

### இளைஞர் கவனத்துக்கு

(1) உதைப்பந்தாட்டப் போட்டிகளின்போது, விளையாட்டு வீரர்கள் முதற்கொண்டு பார்வையாளர்கள் வரை உணர்ச்சிவசப்படாத நிலையை கடைக்கொள்ளல்.

(2) சந்தி, சந்தியாக ஒன்று கூடும் இளைஞர்களால் ஏற்படுகின்ற முரணபாடுகள், சண்டைகளை விடுத்தல்.

(3) பொழுது போக்குகளை - விளையாட்டு, கலை, கலாசார வழிகளில் பயன்படுத்துவதற்கு ஐக்கிய முன்னணியை நாடுதல்.

### துவிச்சக்கர, மோட்டார் வண்டிப் பாவனையாளர்களுக்கு

(1) இருபாலாரும் சமாந்தரமாக பயணிப்பது, மோட்டார்கள் ஒன்றன் பின் ஒன்றாக அதிவேகமாகச் செலுத்துவது, வழிபாடுகள் முடிந்து வீதிகளில் மக்கள் விரைந்துகொண்டிருக்கையில் 'கோர்ன்' அடித்தபடி வேகமாக ஓடி வேடிக்கை காட்டுவது போன்றவற்றை உடனடியாக நிறுத்துங்கள்.

### பெற்றோர் கவனத்துக்காக

(1) மாணவர்கள் வீட்டில் கற்பதற்கு வசதியாக தொலைக்காட்சியை நிறுத்துவதுடன், நீங்களும் மனம் ஒத்து உதவுங்கள்.

(2) பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்வதைக் கண்காணியுங்கள்.

(3) பாடசாலைக்கு சென்று பிள்ளையின் விடயங்களில் தலையிடுவதை விட்டு ஆசிரியரிடம் தனியாக அறிந்து வழி நடத்துங்கள்.

(4) மாணவர்கள் தொழில் முயற்சிகளில் நடமாட்டம் கொள்வதை தடுத்து நிறுத்துங்கள்.

(5) ஆண் பிள்ளைகளின் நடவடிக்கைகளை மட்டுமல்லாமல், பெண் பிள்ளைகளிலும் கவனமெடுங்கள்.

(6) வீட்டுப்பிள்ளைகள் ஆயினும் வீட்டு வீதியில் கிரிக்கெட், கிட்டி அடித்து விளையாடுவதைத் தடுத்து நிறுத்துங்கள்.

### அனைவரது கவனத்துக்கும்

(1) வீதியைத் தடைசெய்ய அவசரம் ஏற்படின் ஐக்கிய முன்னணியுடன தொடர்பைக் கொள்ளல் வேண்டும்.

(2) வீட்டுப் பிராணிகளான ஆடு, கோழி, தாராக்களை பொது இடங்களுக்குப் போகாது பேணுங்கள். அவற்றால் இடங்கள் அசுத்தமாவதையும், தொற்றுக்கள் பரவுவதையும் தடுங்கள்.

(3) மங்கள நிகழ்வுகளின் போது ஒலிபெருக்கியில் மிதமிஞ்சிய ஒலியை ஏற்படுத்தாதீர்கள்.

### சீரழிவுகளை நிவர்த்திக்க

(1) புதிய குடியேற்றத் திட்டங்களுக்கு வழி வகுத்தல்,

(2) படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெறல்.

(3) இளைஞர்களுக்கு பற்மின்ரன், கரப்பந்தாட்ட மைதானங்களை நிறுவுதல், இரவுகளில் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கும் ஆவன செய்தல்.

(4) பொழுது போக்கு மையங்களை உருவாக்கி கரம்போட், டாம், வீடியோ விளையாட்டுகளுக்கு வாய்ப்பு வழங்கல்.

(5) குருநகர் பிரதேசத்தில் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு மண்டபங்களின் கட்டட வேலை பூர்த்தியானதும், வீதிகளில் தடைபோட்டு மங்கள, அமங்கல நிகழ்வுகளை நடத்துவதை நிறுத்துதல்.

மேற்சொன்ன கருத்துக்கள், திட்டவரைவுகளோடு மேலும் பலவற்றை உள்ளடக்கி "புதியதோர் சமுதாயத்தைக் காண எழுவோம்" என்னும் பிரசுரத்தை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் வெளியிட்டுள்ளனர்.

அபிவிருத்தி அடைய வேண்டிய ஒரு வளர்முகப் பிராந்தியத்துக்கு தேவையான பல விடயங்கள் அதில் இருக்கின்றன. பிரசுரத்தை அனைவரும் பெற்று வாசித்து நிலைமைகளை உணர்ந்து கொண்டாலே எதிர்காலம் சிறக்கும்.

இந்தத் தேவை குருநகர் கிராமம் ஒன்றுக்கு மட்டும் உள்ளடங்கியது ஆகாது. மற்றக் கிராமங்களும் பின்பற்றக்கூடிய சிந்தனைகளை ஐககிய முன்னணியினர் பல நாள் உழைப்பில் செதுக்கி இருப்பது மட்டும் போதாது, அதனைச் செயற்படுத்துவதுதான் முக்கியம்.

எதிர்வரும் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இவை நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறைஎன்று வைக்கப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தூரத்துப் பச்சையாகும் சமாதான நகர்வுகள்...

கடந்த சில வாரங்களாக பரபரப்பாகப் பேசப்பட்டும், முன்னெடுக்கப்பட்டும் வந்த சமாதான முயற்சிகள் மீண்டும் ஒரு தேக்கநிலையை அல்லது முட்டுக்கட்டை நிலையை எட்டவைகக்கும் தன்மையையே அரசின் - அதாவது, ஜனாதிபதியின் - அணுகுமுறைகள் உருவாக்கி வருகின்றதை உணரக்கூடியதாகவுள்ளது.

இது ஒன்றும் எதிர்பார்க்காத, அதிர்ச்சி தரும் விடயமல்ல. மாறாக இன்றைய புதிய அரசின் கட்டமைப்பின் - தன்மையானது இப்படியான ஒரு நெருக்கடி நிலைக்கு சமாதான முயற்சிகளை கொண்டு போய்த்தள்ளிவிடும் ஆபத்து ஏற்படும் சாத்தியம் அதிகளவில் இருந்தது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றேயாகும்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கக் காட்டிய ஜனாதிபதியின் வேகம், அவரது அரசியல் விவேகத்தை, ஆளுமையை சந்தேகிக்க வைக்கும் தன்மை கொண்டதாகவே இருந்தது.

முன்னர் ஐ.தே.க முன்னணி சமாதான நகர்வுகளை ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட உடனேயே மேற்கொள்ள வைத்த அரசியல் சூழ்நிலை என்பது வேறு, இப்போதைய அரசியல் யதார்த்த நிலைவேறு, அப்போது போரின் தொடர் அழுத்தங்களின் பன்முகப்பட்ட தாக்கங்களுக்கு முகங்கொடுக்க இயலாது அவலப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் மீதும். ஜனாதிபதியின் மீதும் ஏற்பட்டிருந்த அபரிமிதமான வெறுப்பானது, ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு சகல வழிகளிலும் ஒரு பின்புல ஆதரவுச் சக்தியாக இருந்தது வெளிப்படையான விடயமேயாகும்.

அது மட்டுமல்ல சர்வதேச சமூகத்தின் ஆதரவும், நோர்வேயின் அநுசரணையும், விடுதலைப்புலிகளின் ஆத்மார்த்தமான ஒத்துழைப்பும் ஒன்று சேர்ந்த நிலையில் சமாதான முயற்சிகள் ஓரளவுக்கேனும் வெற்றிகரமான நிலையை எட்டும் என்ற நம்பிக்கை ஓரளவுக்குத்தானும் மக்களிடம் இருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டபோதும் அதற்கான அடித்தளத்தை ஸ்திரப்படுத்தத் தேவையான அடிப்படையான விடயங்களில் உறுதியான முடிவுகளை நேர்மையாகவும், துணிச்சலாகவும் எடுக்கும் செயலார்வம் ரணில விக்கிரமசிங்கவிடம் இல்லாததால் இரண்டாண்டு கால சமாதான நீடிப்பு வெறும் போர்நிறுத்த நீடிப்பாக மட்டுமே தொடர்ந்து கொண்டிருந்தது.

இறுதியில் இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான யோசனைகள், அரசிடம் கையளிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை நிராகரிக்கும் தனது ஆழ்மன கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினார்.

அதன் முடிவு ஆட்சிக்கலைப்பை மேற்கொள்ளும் ஜனாதிபதியின் தீர்மானத்தில் முற்றுப்பெற்றது.

புதிய தேர்தலின் முடிவு, ஆட்சி மாற்றத்தை உறுதிப்படுத்த சமாதானத்தை சகல வகையிலும் எதிர்க்கும் சக்திகள் ஆட்சி பீடம் ஏறியபோதே அமைதி முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிப் போனது.

எந்த வகையிலும் ஜனாதிபதியும், அவரின் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த இனவாதிகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் மனப்பக்குவம் இல்லாதவர்கள் என்பது தெளிவாக உணர்ந்துகொள்ளக்கூடிய நிலையில், அவர்கள் மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முனைப்புக்காட்டியது உண்மையில் வேறு உள்நோக்கங்களின் அடிப்படையில் அமைந்த எண்ணத்தின் வெளிப்பாடேயாகும்.

சந்திரிகாவோ, அவரது பெற்றோர்களோ, சகோதரரோ, கட்சியினரோ மட்டுமல்ல அவரைத் தற்போது முண்டுகொடுத்துக் காப்பாற்றும் ஜே.வி.பி உட்பட சகல பேரினவாதக் கட்சிகளையும் சார்ந்தவர்களோ இந்த மண்ணில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி சமாதானத்தை ஏற்படுத்தும் - மனித உரிமைகளை மதிக்கும் தன்மையற்றவர்கள் என்பதை ஏற்கனவே சமாதானத்திற்கான யுத்தம் ஒன்றை நடத்தி சந்தேகமற தம்மைத்தாமே நிரூபித்துக்கொண்டவர்கள் என்பதை வரலாறு தெளிவாகப் பதிவுசெய்தே வைத்துள்ளது.

இந்த நிலையில் சர்வதேச நாடுகளையும், சமாதான அநுசரணையாளரையும் தொடர்ந்தும் காலம் கடத்தி, ஏமாற்றி தமது தேவைகளை மட்டும் நிவர்த்திசெய்யும் தந்திரோபாய நடவடிக்கைகளையே புதிய சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் மேற்கொள்ளத்தொடங்கியுள்ளது. என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்வதும் அவசியமாகியுள்ளது.

உண்மையில் அரசு தேசிய ஒருமைப்பாடு - இறைமை போன்ற விடயங்களை ஆழமான அக்கறையைக் கொண்டிருக்குமா னால் சமாதானத்திற்கு தடையாக உள்ளவர்களையும், அதனை நிராகரிப்பவர்களையும் புறக்கணித்துவிட்டு நியாயமான மனித உரிமைகளை மதிக்கும் பண்புடன், அமைதியை ஏற்படுத்தும் இலக்குடன் தமிழ்மக்களது மிகச்சாதாரணமானதும், நிராகரிக் கவே முடியாததுமான அவர்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமை சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் திடத்துடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வரத் துணிவு கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும் அற்ற - வஞ்சனைச் சொல்லும், வாய்ச்சொல் வீரர்களாக ஜனாதிபதியும், அவரது தோழர்களும் இயங்கநினைப்பது மற்றொரு வரலாற்றுத் தவறுக்கு அவர்கள் தம்மைத் தயார் நிலைப்படுத்துவதாகவே அமையும்.

வலுவற்ற அரசைக் கட்டுப்படுத்தி, அவல வரலாற்றை மாற்றும் வல்லமை, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இலங்கையில் உண்டு. ஆனால் அவர் பேரினவாத சிந்தனைச் சக்திக்குள் ஊறிப்போனவராகவே இன்னமும் இருப்பது தான் சமாதான நம்பிக்கைகளை சிதறடிக்கப்படுவதற்கு காரணமாக உள்ளது.

இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டியது ஜனாதிபதி மட்டுமே...

## நாடும் நடப்பும்




# இலங்கை இராணுவம் பங்கேற்கும் பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகை

## ஜூன் 12 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் முதன்முறையாகப் பங்கு கொள்ளும் பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகை (MPE) தென்னிலங்கையில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஐ.நா சமாதான உதவி நடவடிக்கைப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த படையினருடன் இலங்கை இராணுவத்தினரும் குகுலேகங்க என்ற இடத்தில் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கையில்சமாதான உதவி நடவடிக்கையில் பயிற்சிக்கான நிலையத்தை அமைப்பதற்கு குகுலேகங்க என்ற இடத்தை அதிகாரிகள் தெரிவு செய்துள்ளனர். எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தப் பயிற்சி நிலையமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகைப் பயிற்சி நெறி முதன் முறையாக 2000 ஆம் ஆண்டு நேபாளத்திலும், பங்களாதேஷில் 2002 ஆம் ஆண்டும் நடத்தப்பட்டது.

மூன்றாவது ஒத்திகைப் பயிற்சி எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை குகுலேகங்க என்ற இடத்தில் நடைபெறவுள்ளது

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியக் கட்டளைப் பீடத்தின் உதவியுடன் நடைபெறும் இந்த ஒத்திகையில் பங்களாதேஷ், மொங்கோலியா, நேபாளம், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 180 இற்கும் அதிகமான படையினருடன் இலங்கை இராணுவத்தின் இரண்டு பிளட்டூன்களைச் சேர்ந்த 64 படையினரும் பங்கு கொள்ளவுள்ளனர். இந்த ஒத்திகைப் பயிற்சி நெறிக்கு 'சாம காமன' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ஒத்திகைப் பயிற்சியின் போது ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு படையினருக்கு 31 பொதுவான பாடங்கள் மற்றும் அதிரடித் தாக்குதல் குறித்த பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஒத்திகைப் பயிற்சியானது ஐ.நா சமாதான உதவி நடவடிக்கைகளில் பங்கேற்கும் ஸ்குவாட் அல்லது பிளட்டூன்களுக்கான பொதுவான பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஸ்குவாட் அல்லது பிளட்டூன் அதிரடி நடவடிக்கைகள், ஐ.நாவின் நடவடிக்கைகளைப் பாதுகாத்தல் மோதல் சம்பந்தப்பட்ட விதிகள் அச்சுறுத்தல் நடவடிக்கைகள், கண்காணிப்பு நிலையங்கள், சோதனைச் சாவடிகள், கண்ணிவெடி விழிப்புணர்வு, ரோந்து, தொடர் விநியோக நடவடிக்கை, ஊடக முகாமைத்துவத்தை பொதுப்பிரச்சினைகளின் போது கையாளல், இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த ஒத்திகைப் பயிற்சி இடம்பெறுகிறது.

இதேவேளை, புதிதாக குகுலேகங்கவில் ஸ்தாபிக்கப்படவுள்ள ஐ.நா சமாதான உதவி நடவடிக் கைக்கான பயிற்சி நிலையம் ஒரே சமயத்தில் 600 படையின ருக்குப் பயிற்சியை வழங்கக் கூடியதென இராணுவ வட்டாரங் கள் தெரிவித்தன

ஐ.நா சமாதான உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைப் படையினரை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டம் அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதற்காக ஆரம்பிக்கப்படவில்லை.

முப்படைகளிலும் போதியளவு ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கேற்ற வகையில் இளைஞர்களைக் கவரவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்தின் மிகப்பெரிய இந்த ஒத்திகைப் பயிற்சி இலங்கையில் முதல்முறையாக நடைபெறவுள்ளது

இந்த ஒத்திகைப் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிகார, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத்தளபதி எயர்மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா, அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ் றிட், அவரதுமனைவி, பங்களாதேஷ் தூதுவர் ஏ.எம்.யாகூப் அலி, நேபாளத் தூதுவர் கன்வர், ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மிகுவல் பேர்மியோ, சர்வதேச செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதி தியரி பைராட், பிரிட்டிஷ் கவுன்சில் இயக்குநர் ரொனி ஒப்ரெய்ன் மற்றும் -

பாதுகாப்பு ஆலோசகர்கள், இராஜதந்திரிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், ஆயுதப்படை சிரேஸ்ட அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பயிற்சி நெறியை பாதுகாப்புச் செயலாளர் சிறில் ஹேரத் நிறைவு செய்து வைப்பார்.

# இலங்கைக்கான நிதியுதவி குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி ஆராய்வு

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளைப் பயன்படுத்தி 2004 ஆம் ஆண்டிற்கான நிதியுதவிகளை எவ்வாறு வழங்குவதென ஆசிய அபிவிருத்தி வங்கி ஆராயவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்புத் தன்மை குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி கவனம் செலுத்தவுள்ளதாக அதன் உதவித்தலைவர் லிக்குன் ஜின் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்பதாக கடந்த வருடம் வகுக்கப்பட்ட ஐந்து வருடகால திட்டத்திற்குப் பதிலாக அடுத்த 3 முதல் 4 வருடங்களுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய அரசாங்கம் உருவாகியுள்ளதால் அதன் கொள்கைகளையும், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முன்னேற்றங்களையும் பொருளாதார வளத்தில் தனியார் துறையின் பங்களிப்பையும் மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் கூரே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இவ்விருவரும் இந்த விடயங்களைத் தெரிவித்தனர்.

# மட்டு.படுகொலைகள் தொடர்பாக இராணுவம் - புலிகள் ஆராய்வு

கிழக்கில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் படுகொலைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் சந்தித்து ஆராயவுள்ளனர்.

கிழக்கில் தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற்று வருவது போர் நிறுத்த ஒப்பந்தத்தை வெகுவாகப் பாதிப்பதாகவும், இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்தே, இச்சந்திப்புக்களுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் எதிர்வரும் புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பில் இராணுவத்தினரின் சார்பில் கிழக்கின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சாந்த கொட்டேகொட தலைமையிலான படை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் ஒரு சிரேஷ்ட தளபதி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவை இச்சந்திப்பில் இடம்பெறச் செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் படைத்தரப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தெற்குத் திசையினிலே...

கொழும்பிலிருந்து இந்திரஜித்

# தழம்பல் நிலையில் சமாதானம் இக்கட்டான நிலையில் அரசு...!



இலங்கையில் சமாதானக் காற்று எப்போது வீசும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். தற்போதைய தற்காலிக சமாதானம் எந்த நேரமும் குழம்பும் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையில் இருப்பதால், மக்கள் மத்தியில் குறிப்பாக, தமிழ் மக்கள் மத்தியில் நிரந்தர சமாதானம் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டு கொண்டிருக்கின்றன.

இலங்கையின் வரலாற்றில் இதுவரை தமிழ மக்கள் நிம்மதியாக வாழ்ந்த நாட்கள் இல்லையென்றே கூறவேண்டும், ஒவ்வொரு நாளும் தமிழ்மக்கள் ஏதோ ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சேர் பொன் இராமநாதன் மற்றும் சேர் பொன் அருணாசலம் ஆகியோரை, இலங்கையின் வரலாறு முற்றாகவே மறந்து விட்டது. சிங்கள மக்கள் மத்தியிலோ அல்லது இன்றைய சிங்கள மாணவர்கள் மத்தியிலோ சென்று இவர்களை பற்றிக் கேட்டால், சிலவேளைகளில் இவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்கள் எனச் சொன்னாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

சமாதானம் தேவை எனச் சத்தமிட்டுப் பேசுகின்ற எந்த ஒரு சிங்களவரும், குறிப்பிட்ட தமிழர்கள் இருவரையும் பற்றி எங்காவது பேசியது கிடையாது. அவ்வாறு பேசினால், சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு அபகீர்த்தி வந்துவிடும் என்ற பயம் சிங்களத் தலைவர்கள் மத்தியில் காணப்படுகிறது.

எனவே மறந்தும் அவர்கள் இவ்வாறான உண்மைகளை வெளிப்படுத்த மாட்டார்கள். இது திட்டமிட்ட மூடிமறைப்பு என்ற போதும், தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தின் பின்னரும், சிங்களவர்கள் உண்மைகளை மறந்து அல்லது மறந்துவிட்டதுபோல நடிக்கும் நிலைப்பாடுகள் - அவர்களுக்கே ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கடந்த 20 வருட கால யுத்தத்தின்போது தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட இழப்புகள்- இன்னமும் அவர்களின் மத்தியில் ஆறாத புண்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பல்வேறு கனவுகளுடன் பெற்றெடுக்கப்பட்ட பிள்ளைகளின் நினைவுகள் - பெற்றோர் மத்தியிலும், தம்மை ஆளாக்கி விட்ட பெற்றோரின் நினைவுகள் பிள்ளைகளின் மத்தியிலும் நீங்காத எண்ணங்களை கொண்டிருக்கின்றன.

இவையாவும் 1972 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் மேற்கோள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய இன்று தமிழர்களை சர்வதேசம், அங்கீரித்துள்ளமைக்காக கொடுக்கப்பட்ட விலைகள் என்பதில் மறுப்பில்லை. இந்த பெறுமதி கூறமுடியாத விலைகளை கொடுத்த போதும், சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள தமிழர்களின் போராட்ட தியாகங்களை, சிங்கள தேசம் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

வேண்டுமென்றே ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்பதை நினைக்கும்போது, சிங்கள



வர்கள் மீண்டும் நாட்டில் அழிவு ஒன்றை எதிர்பார்க்கிறார்களா? என எண்ணத் தோன்றுகிறது.

சாதாரண சிங்களவர்கள் மத்தியில் யுத்தம் ஒன்று ஏற்பட்டு விடக்கூடாது என்ற விருப்பம் இருக்கிறது. ஆனால், அவர்கள் தமது எண்ணங்களை உடனடியாக வெளிப்படுத்த முன்வருவதில்லை.

பொதுவாகச் சிங்களவர்கள் தேர்தல் ஒன்றின்போது மாத்திரமே தமது அரசியல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். இதனைத் தவிர அவர்கள் ஒரு அரசாங்கம் பிழையான வழியில் சென்றால், அதனைத் தட்டிக்கேட்பதற்கோ அல்லது கண்டிப்பதற்கோ முன்வந்ததில்லை.

1962 ஆம் ஆண்டில் மாத்திரம் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் - அரிசியின் விலையை சதக்கணக்கினால் அதிகரித்த போது, மக்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். ஆனாலும் அதனை ஆட்சிக் கவிழ்ப்பு என்ற நிலைக்குக்கொண்டு செல்ல அவர்கள் முயற்சிக்கவில்லை.

மக்கள் அன்று குறிப்பிட்ட கிளர்ச்சியில் ஈடுபட்ட போதிலும், அந்த கிளர்ச்சியை ஏற்பாடு செய்த இடதுசாரிகள் நினைத்திருந்தால், ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றை செய்திருக்க முடியும். எனினும், அரசியல் நாகரீகம் கருதி அவர்கள் அன்று தமது நோக்கத்தை மாத்திரம் நிறைவேற்றிய பின்னர், போராட்டத்தை விலக்கிக்கொண்டனர்.

இவ்வாறான மக்கள் கிளர்ச்சிகள் பிந்திய காலப்பகுதியில் பதவிக்கு வந்த அரசாங்கங்களை அச்சுறுத்தப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் குறைவான காரணத்தால், பதவிக்கு வரும் அரசாங்கங்கள் தாம் நினைத்தவற்றை மட்டுமே செய்யும் கொள்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

அவ்வாறான செயற்பாடுகள் தற்சமயம் வரை தொடர்கின்றன. எனவே சிங்கள மக்கள் எது சரி எது பிழை என உணரும் வேளையில், அதனை பதவியிலுள்ள அரசாங்கத்துக்கு உரிய முறையில் உணரசெய்கின்ற போதே நாட்டில் மக்கள் ஆட்சி ஒன்று நிலவ முடியும் அல்லது, மக்கள் ஆட்சி என்ற பெயரில் ஜனநாயகத்துக்குப் புறம்பான ஆட்சி ஒன்றே நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலை ஏற்படும்.

அண்மைக்காலத்தை எடுத்துக் கொண்டால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சமாதானத்துக்கான ஆரம்பம், ஏற் படுத்தப்பட்ட விதம் நன்றாகவே அமைந்தது எனலாம்.

போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டது போன்று ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாக வேண்டிய சந்தர்ப்பம் விலகிச் செல்ல செய்யப்பட்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும்.

ஆயினும், அவ்வாறான செயற்பாடுகளின் யதார்த்தத் தன்மையை அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்லாமையே, அவரின் தேர்தல் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டது. சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் ரணிலின் சமாதான நிலைப்பாடு கொண்டு செல்லப்பட்டிருக்குமானால், அதற்குப் பலத்த வரவேற்பு கிடைத்திருக்கும்.

இன்று இருப்பது போன்ற சமாதான ஸ்தம்பிதநிலை உருவாகியிருக்காது. சிங்கள மக்கள் - கடந்த தேர்தலில் மேற்கொண்ட தீர்மானம் காரணமாக, இரண்டு பிரதிகூலங்கள் ஏற்பட்டுள்ளன. சமாதானத்துக்கு தற்காலிக தடை ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில் ஸ்திரமற்ற அரசாங்கம் ஒன்று அமையப்பெற்றுள்ளது. இவை இரண்டும் இந்தியா போன்ற நாடுகளாக இருந்தால், பாதிப்பு பெரிதாக இருக்க மாட்டாது. ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் மக்களின் தீர்மானம் காரணமாக தளம்பல் நிலையில் இருந்த பொருளாதாரம், மேலும் தளம்பும் நிலைக்குசெல்லும் வாய்ப்பு உருவாகியுள்ளது.



சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற நிலையில், முன்னரைப் போன்று அரசாங்கம் - தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பழியைப் போட்டு விட்டு, சமாதான முனைப்புகளைக் கிடப்பில் போட முடியாது.

அவ்வாறு செய்ய அரசாங்கம் நினைக்குமானால், அது அதன் ஆட்சிக்கு அஸ்தமனத்தை தேடிக் கொண்டமைக்குச் சமமாகும். அதேநேரம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தற்சமயம் இருக்கும் சர்வதேச செல்வாக்கை மேலும் ஒரு படி உயர்த்திவிடும்.

# மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அமபாறை, திருகோணலை ஆகிய பகுதிகளில் மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களைத் திறக்கவுள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு இயற்கை மூலவளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி - தம்மைச் சந்தித்த தூதுக் குழுவிடம் பேசுகையில் உறுதியளித்தார்.

மேற்படி அமைச்சில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் மற்றும் அலி ஸாகிர் மௌலானா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இவர்கள் வடக்கு-கிழக்கில் நிலவும் சுற்றாடல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும் எடுத்து விளக்கினர். இந்நிலையைச் சீர்படுத்த பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

துப்பாக்கிச் சன்னங்களால் பெருவாரியான பனைமரங்களும், தென்னை மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பெருந்தொகையான மரங்கள் குணடு வெடிப்பு, சிதறல்கள், தீப்பிழம்பு ஆகியவற்றால் பட்டுவிட்டன. இவை வெட்டப்பட வேண்டும். இல்லையேல் ஏனைய மரங்களும் பாதிப்படையும் என்றும் இக்குழுவின் விளக்கினர்.

மேலும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அநேக கட்டட நிர்மாணப்பணிகள் இடம்பெற வேண்டும். எனினும் கண்ணிவெடிகள், மற்றும் மிதிவெடிகள் பிரச்சினையாக உள்ளன. அகழ்வுக்கான அனுமதி பெற அதிகாரிகளைக் கண்டு கொள்ள முடியாதுள்ளது எனவும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

கட்டட நிர்மாணத்துக்கான மண்ணுக்கு தென்மராட்சியில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. இதையடுத்து நில ஆய்வு பணியக அதிகாரிகளை பிராந்தியக் கட்டடத்தின் செயலில் ஈடுபடுத்துமாறு அமைச்சர் இந்தப் பணியக அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கிடப்பட்டும் பணிகள் மேற்கொள்வதில் தாமதம்

(நெடுந்தீவு)

2003 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஒதுக்கீட்டுக்கான வேலைகள் இது வரைக்கும் நெடுந்தீவு பிரதேசத்தில் மேற்கொள்ளபடாது, இழுத்தடிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

நெடுந்தீவு மேற்கு மின்சார வழங்களுக்கென 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு மின்சார சபைக்கு வழங்கப்பட்டபோதும் அதற்கான மின்கம்பங்கள் மட்டுமே இங்கு எடுத்து வரப்பட்டுள்ள நிலையில் ஏனைய வேலைகள் எதுவும் இடம்பெறாதுள்ளது.

இதேபோன்று நெடுந்தீவு மேற்கு நெழுவினியப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து சுமார் 300 மீற்றர் நீளமான பிரதான வீதி திருத்தத்துக்கென 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு நிதி வழங்கப்பட்ட போதும் எந்தவிதமான ஆயத்த வேலைகளும் இடம் பெறாதுள்ளது.

இவ்வாறு உரிய காலப்பகுதியில், உரிய வேலைகள் மேற்கொள்ளப்படாமையால், இனிவரும் காலப் பகுதிகளில் இந்தப் பிரதேச அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்வதில் பெரும் நெருக்கடி நிலைகள் உருவாகலாம் எனப் பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# வாழைச்சேனை கடதாசி ஆலை மூடப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது

கிழக்கு மாகாணத்திலுள்ள வாழைச்சேனை கடதாசி ஆலை மூடப்படும் அபாயம் தோன்றியிருப்பதாக, அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக அங்குள்ள தொழிலாளர்கள் தமது தொழில் பாதுகாப்பு குறித்து அச்சம் வெளியிட்டுள்ளனர்.

1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சாலை ஆரம்பத்தில் 3000 ஊழியர்களை கொண்டிருந்தது.

ஆனால், தற்சமயம் அங்கு 450 ஊழியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்.

எனினும், கடதாசி ஆலையின் பணிகள் பல்வேறு காரணங்களால் ஸ்தம்பித்திருப்பதால், இந்த ஊழியர்கள் தமது குறையை நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரியிடம் எடுத்துக் கூறினர்.

# பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகைத்தல் பொருள் விற்பதற்குத் தடை

பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்யப்படவுள்ளது.

இந்த விடயங்கள் அடங்கிய சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது என சுகாதார பாதுகாப்பு போசாக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

புகை பிடித்தல் பழக்கம் - இன்றைய சமூகத்தில் ஒரு சுகாதாரப் பிரச்சினையாக மட்டுமல்ல, சமூகப் பொருளாதாரப் பிரச்சினையாக மாறி வருகின்றது. இவற்றை விட புகைத்தல் பழக்கத்தினால் ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது. இதன் காரணத்தினால் புகைப்பிடிக்கும் பழக்கத்தினை முற்றாகச் சிறுவர் மத்தியில் கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புகைபிடித்தலுக்குத் துணை போகும் சகல ஏற்பாடுகளும் இடை நிறுத்தப்படவுள்ளன.

சட்டமூலப் பிரேரணை ஏற்பாட்டின்படி பதினாறு வயது சிறுவர்களுக்குப் புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என மேலும் தெரிவித்தார்.

## தீ மிதிப்பு நிகழ்வு

கந்தர்மடம் அருள்மிகு செல்வ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் விசேட ஆராதனை, பஜனை நிகழ்வு, பொங்கல் நிகழ்வு ஆகியவற்றைத் தொடர்ந்து இடம்பெறும் தீமிதிப்பு நிகழ்வில் அடியார்கள் கலந்துகொண்டு நாகபூஷணி அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலயத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (55)

# ஈரானில் நடந்த பூமியதிர்ச்சி 30 பேர் பலி; 150 பேர் காயம்!

ஈரானின் வடபகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால், சுமார் முப்பது பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 150 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கஸ்பியன் கடலுக்கு அருகிலுள்ள மாகாணம் ஒன்றிலேயே இந்தப் பூமியதிர்ச்சி இடம்பெற்றதாகவும், தற்போது மீட்புப்பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பூமியதிர்ச்சி 6.2 றிச்டர் அளவில் ஏற்பட்டதாகவும், இதன்பின் பல பூமியதிர்ச்சி ஏற்பட்டதற்கான பதிவுகள் இடம்பெற்றபோதும், அவறறால் பெரியதாகத் தாக்கம் எதுவும் ஏற்படவில்லை.

தலைநகர் தெஹிரானுக்கும் பூமியதிர்ச்சி நடந்த பிரதேசத்திற்கும் இடைப்பட்ட வீதிகள், பாறைகள் வீழ்ந்து தடுக்கப்பட்டிருப்பதாகவும் இவற்றை அகற்ற மீட்புப்பணியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு பாறைகள் விழுந்து தடுக்கப்பட்டுள்ள பாதையின் 15 கிலோ மீற்றரை கடந்த வெள்ளி இரவே மீட்புப் பணியாளர்கள் வீதிப்போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்துள்ளனர்.

பூமியதிர்வு ஏற்பட்டு மலைப் பாறைகள் காருக்கு மேல் விழுந்ததில், காரில் பயணம்செய்த 18 பேர், உடல்கள் நசுங்கி உயிரிழந்துள்ளனர். அத்துடன், இந்தப் பூமியதிர்ச்சியினால் 60 வாகனங்கள் புதையுண்டுள்ளதாக உள்ளூர் ஆளுனர் தெரிவித்தார்.

மீட்புப் பணியாளர்கள் தமது மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் பூமியதிர்வினால் ஏற்பட்ட இழப்புக்கள் இன்னும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுவதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

பூமியதிர்வு நடந்த தரைத்தோற்ற அமைப்பின்படி மலைகள் அதிகளவில் உள்ளதெனவும், இதனால் - ஹெலிகொப்ரர்கள் மூலமாகவோ, தரைவழியாகவோ மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள முடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் ஈரானில் நடந்த பூமியதிர்வினால் சுமார் 26 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்தும், பல கோடி ரூபா சொத்துக்கள் சேதமடைந்ததும் நினைவு கூரத்தக்கது.

## தலாய்லாமாவுடன் சாள்ஸ் சந்திப்பு



திபெத்திய புத்தமத தலைவர் தலாய்லாமா இப்போது இலங்கிலாந்தில் சுற்றுப் பயணம்செய்து வருகிறார். அரசு முறையில் அவரை தலைவர்கள் சந்திக்கக் கூடாது என்றும் அவர் நாடு கடத்தப்படுவார் என்றும் சீனா கூறிவருகிறது. ஆனால், தனிப்பட்ட முறையில் அவரை இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் லண்டனில் சந்தித்துப் பேசினார். இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர்தான் தலாய்லாமாவைதான் சந்திக்கப்போவது இல்லை என்று அறிவித்துவிட்டார்.

ரபா எல்லைப் பகுதியில்

# இஸ்ரேலியத் தொடரணி மீது கார்க்குண்டுத் தாக்குதல்!

எகிப்துக்கும் காஸாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய வாகனத் தொடரணி ஒன்றின் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ரபாவில் பணியாற்றும் இஸ்ரேலியர்கள் நிரம்பியிருந்த பஸ் ஒன்றின் அருகே மேற்குறித்த கார் நிறுத்தப்பட்டதாகவும், இதையடுத்து இஸ்ரேலியர்கள் இருந்த பஸ் மீது இனந்தெரியாத ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, கார்க்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. எனினும், இந்தச் சம்பவத்தில் பஸ்ஸில் இருந்த இஸ்ரேலியர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

காரில் இருந்தவர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு இஸ்ரேலியப் படையினர் காயமடைந்தனர்.

கடந்த வாரம் எல்லை நகரான ரபாவில் இஸ்ரேலியர்கள் நடத்திய தாக்குதல்களில் 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதற்குப் பழிவாங்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு இஸ்லாமிக் ஜிகாத், அல்-அக்ஸா தீவிரவாதிகள் பிரிகேட் மற்றும் பி ஆர்சி ஆகிய மூன்று குழுக்களே உரிமை கோரியுள்ளன.

இதேவேளை -

மத்திய காஸாவில் இராணுவ நிலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் பலஸ்தீன பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மூன்று வெளி நாட்டவர் உட்பட ஐவர் சவுதியில் நடந்த தாக்குதலில் பலி

சவுதியின் கிழக்குப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று வெளிநாட்டவரும் இரண்டு சவுதி பாதுகாப்புப் படையினர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

எண்ணைத் தொழிற்சாலை ஊழியர்கள் பயன்படுத்தும் மூன்று கட்டடங்களிலிருந்து ஆயுததாரிகள் தாக்குதலை நடத்தியச க சவுதிப் படையினர் தெரிவித்தனர்.

நேற்றைய தாக்குதலின் பின்னர் ஆயுததாரிகள் பல பொதுமக்களை பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றதாக இராஜதந்திர வட்டாரங்கள் செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்தன. ஆனாலும், இந்த செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை நடத்தியவர்கள் இராணுவ உடையுடன், சிறிய காரொன்றில் வந்ததாக தாக்குதலை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சவுதியில் அண்மைக் காலமாக வெளிநாட்டவர் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப பிடத்தக்கது.




# மெக்ஸிக்கோவில் நடந்த கூட்டம் ஆர்ப்பாட்டத்தால் கைவிடப்பட்டது!



மெக்ஸிக்கோ நாட்டின் இரண்டாவது பெரும் நகரான கௌதலஜாராவில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், லத்தீன் அமெரிக்கத் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற உச்சி மாநாடு குழப்பவாதிகளுக்கும், பொலிஸாருக்குமிடையே நடைபெற்ற வன்முறை மோதல்கள் காரணமாக குழப்பத்தில் முடிந்துள்ளது.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட எதிர்ப்பாளர் குழுக்கள், பொலிஸார் மீது கற்கள் மூலம் தாக்கி கலவரத்தை ஏற்படுத்தியதையடுத்து நடத்தவிருந்த செய்தியாளர் மாநாட்டை பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் சிராக் ரத்துச்செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

மாநாடு நடைபெற்ற இடத்திற்கு அண்மையில் நடந்த இந்தக் கலவரம் காரணமாக 20 பேர்வரை காயமடைந்ததுடன், சுமார் 90 பேர்வரை கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

இந்தக்கலவரத்தின் பின்னணியில், ஒரு வன்முறை மாணவர் இயக்கம் இருக்கக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 50 பேர் கொண்ட கிளர்ச்சியாளர்கள் நூற்றுக்கணக்கிலான மக்கள் கலந்து கொண்ட வறுமைக்கு எதிரான அமைதிப் பேரணியொன்றில் குழப்பத்தை உண்டு பண்ணியபோது, வெடித்த கலவரத்தைப் பொலிஸார் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று செயதிகள் தெரிவிக்கின்றன.

மாநாட்டு தூதுக்குழுவினரை பாதுகாக்க கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும, இந்தக்கலவரம் நடந்தேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர்ப் பிரயோகம் போன்றவற்றினால் பல பொதுமக்கள் மற்றும் பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், கலவரம் நடந்த பகுதியிலிருந்த வங்கிகள், வியாபார நிலையங்கள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் இவ்வாறான ஒரு ஆர்ப்பாட்டம் நடந்திருப்பது மெக்ஸிக்கோ அரசாங்கத்திற்கு மிகப்பெரிய அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# நடுத்தர வீச்சு ஏவுகணை; பாகிஸ்தான் பரிசோதனை!




நடுத்தர வீச்சுக் கொண்ட அணு ஆயுதத்தை தாங்கிச்சென்று- நிலைகளைத் தாக்கக் கூடிய ஏவுகணையொன்றை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஹட்ரிவ் வி மிசைல்ஸ் என அழைக்கப்படும் இந்த ஏவுகணை நேற்று பரிசோதித்து பார்க்கப்பட்டது. ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூர வீச்சைக்கொண்ட இந்த ஏவுகணைப் பரிசோதனை பாகிஸ்தானிலுள்ள இனம் தெரியாத இடத்திலிருந்து நடத்தப்பட்டது.

பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டததை இன்னமும் வளர்க்க வேண்டுமென, அந்நாட்டின் படை அதிகாரி மேஜர் ஜெனரல் செனகற் சுல்தான் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் ஆறு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட அணுகுண்டுப் பரிசோதனையின் ஆறாவது வருட நினைவு தினத்துக்கு அடுத்த நாள் இந்த ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்த ஏவுகணைப் பரிசோதனையில் பாகிஸ்தான் பிரதமர் ஷபருல்லா ஜமாலி மற்றும் சிரேஷ்ட பாகிஸ்தான் இராணுவத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

அணுவாயுதங்களை குறைப்பது தொடர்பாக எந்தவொரு சமரசப் பேச்சுவார்த்தைக்கும் இடமில்லையென பரிசோதனை நடத்தப்பட்ட இடத்தில் விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நுட்ப வியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பிரிவினது வளர்ச்சிக்கு பாகிஸ்தான் அரசாங்கம், தொழில் நுட்ப ஆலோசனை, நிதி ஆதரவு போன்றவற்றை தொடர்ந்தும் வழங்குமெனத் தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனையின் மூலம் இந்தப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளதென்ற கூற்றை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளரான மசூக்கான் மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் அணு ஆயுதத்தை வைத்திருப்பது அதன் பாதுகாப்பிற்கேபொழிய, வேறொன்றுக்குமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான், இந்திய நாடுகளுக்கிடையில் அண்மையில் அணு ஆயுதக் குறைப்பு தொடர்பாக பேச்சு நடைபெற இருந்த போதிலும், இந்திய தேர்தலை முன்னிட்டு அது ஒத்திவைக்கப்பட்டது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹையிட்டியில் பெரும் மழை பெருமளவு உயிர்ச்சேதம்!



கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள டொமினிக்கன் குடியரசு மற்றும் ஹையிட்டி பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்துவருவதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே 300க்கும் மேற்பட்ட உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஹையிட்டி பகுதியிலுள்ள மாப்போ கிராமத்தில் உள்ள மக்கள் தாங்கள் பலமணி நேரம் மரங்களிலேயே தங்கியிருந்ததாகவும், தமது உடமைகள்யாவும் வெள்ளத்தால் அள்ளுப்பட்டு சென்றுவிட்டதாகவும் கூறினர்.

வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு உணவு, முதலுதவி சாதனங்கள், தூயநீர் உட்பட சர்வதேச உதவிகள் வந்து சேர்ந்த வண்ணம் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இதுவரை 900க்கும் அதிகமானோர் இறந்து போய் விட்டதுடன், மேலும்பலர் காணாமல் போயுள்ளதாகவும், வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ள மாப்போ கிராமத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தொலைவிலுள்ள மேட்டுப் பகுதிகளில் பாதுகாப்பு தேடியுள்ளதாகவும், இப்பகுதியிலுள்ள அரைவாசிக்கும் அதிகமான வீடுகள் அழிந்து விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தொற்றுநோய் அபாயத்தை தடுக்க வெள்ளத்தில் மிதந்து செல்லும் சடலங்களை மீட்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஹெலிகள் மூலம் தொற்றுநீக்கி நாசினிகள் விசிறப்பட்டு வருகிறது.

கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இடையிலான வீதிகள் அனைத்தும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

ஐநாவின் பேரழிவு நிவாரண நிபுணர்கள் அடங்கிய இரு குழுக்கள் இந்தத் தீவில் ஏற்கெனவே நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ள உள்ளூர் ஐநா குழுவினருக்கு உதவி வழங்க இந்தத் தீவுக்கு வந்து சேர்ந்துள்ளனர். இந்தப் பகுதிகளில் சுமார் 48000 இற்கும் அதிகளவு மக்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# விண்வெளியில் புதிய கிரகம்



விண்வெளியில் புதிய கிரகம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஸ்பிட்சர் 'ரெலஸ்கோப்' மூலம் இந்த கிரகம் அமெரிக்க விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான 'நாசா' வின் ஸ்பிட்சர் ரெலஸ்கோப் மூலம் விஞ்ஞானிகள் வான மண்டலத்தை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்கள் சூரிய மண்டலத்துக்கு வெளியே 100 க்கும் மேற்பட்ட கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், அவை எல்லாம் 100 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது. பூமியும் அதன் அருகே உள்ள கிரகங்களும் 450 கோடி ஆண்டுகள் பழமையானவை.

இந்த விஞ்ஞானிகள் இப்போது புதிய கிரகம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இது வயதில் மிகச் சிறியது. இதன் வயது 10 லட்சம் ஆண்டுகளாகும். அதனால், இதை இளைய கிரகம் என்றும், குழந்தைக் கிரகம் என்றும் சொல்கிறார்கள். இதுவும் சூரிய மண்டலத்துக்கு வெளியே உள்ள கிரகமாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை இராணுவத்தினருக்கான மனித உரிமைக் கருத்தரங்கில் 4 ஆவது கட்டம் நாளை ஆரம்பம்

## கிரேசர் இயந்திரத்தில் சிக்கி இளைஞர் படுகாயமுற்றார்!

நீர்வேலிப் பகுதியில் கிரேசர் இயந்திரத்தின் பெல்ட்டில் சிக்கிய இளைஞர் ஒருவர் வயிற்றுப் பகுதியில் பலமான வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதன வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மதியம் சிறுப்பிட்டி கிழக்கில் இடம்பெற்றது.

இந்த சம்பவத்தின் போது கோப்பாயைச் சேர்ந்த அமுதன் அகிலன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

சிறுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள கல்லுடைக்கும் ஆலையில் கிரேசர் இயந்திரத்துக்கு ஓயில் விட்டு அதை இயக்க முற்பட்டவேளை, இயந்திரத்தின் பெலிட்டில் மேற்படி இளைஞன் அணிந்திருந்த சேட் சிக்கியது.

இதனால் இயந்திர பெல்ட் பகுதியில் இளைஞன் சிக்கி வயிற்றுப் பகுதியில் பலமான வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

## பாகிஸ்தான் அணுஆயுத ரகசியம் கடத்திய இலங்கையர் கைது!

பாகிஸ்தானிய அணுஆயுத விஞ்ஞானி அப்துல் கதிர்ஹானுடன் இணைந்து அணுஆயுத இரகசியத் தகவல்களை வெளிநாடுகளுக்கு கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையர் ஒருவர் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் தலைமை அணுஆயுத விஞ்ஞானி அப்துல் கதிர்ஹான் நாட்டின் அணுஆயுத இரகசியங்களை வடகொரியா, மற்றும் வல்லரசு நாடுகள் சிலவற்றுக்கு அனுப்பியதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்துல் கதிர்ஹான் பாகிஸ்தானியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்புடுத்தப்பட்டார்.

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் அணுஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் யுரேனியத்தை லிபியாவுக்கு அனுப்பியமையை ஏற்றுக்கொண்டார்.

இதற்காக பாகிஸ்தான் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்தார். இந்த நிலையில் இவரது நிதி அலுவலராக கடைமையாற்றிய இலங்கையரான பீ.எஸ்.ஏ.தாஹீரும் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகத்தில் இவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்கான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்கள் குறித்த நான்காவது கட்டப் பயிற்சிநெறி நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கட்டளையிடும் அதிகார மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் இந்தக் கற்கைநெறி பனாகொட இராணுவ முகாமில் நான்கு வாரங்கள் இடம்பெற உள்ளது.

இந்தக் கற்கைநெறி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக இராணுவ அதிகாரிகளுக்கான பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி.குலதுங்க கலந்து கொள்ளவுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு, மனித உரிமைகளுக்காண நிறுவனம் ஆகியவற்றின் துணையுடன் இராணுவம் நடத்தும் இந்தக் கற்கைநெறியில் இதுவரை 176 அதிகாரிகளும், 126 கட்டளையிடும் அதிகார மற்ற சிரேஷ்ட அதிகாரிகளும் பயிற்சி பெற்றுள்ளனர்.

தற்போதய இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல 51வது டிவிசனின் பொதுக் கட்டளைஅதிகாரியாக இருந்தசமயத்தில் - இராணுவத்தில் தனது படைப் பிரிவுக்குள் மனித உரிமைக் குழுக்களை நிறுவியிருந்ததாகவும். தற்போது இவரது உதரவின்படி இராணுவத்தினர் இணைந்து- தலமையகங்கள், டிவிசன்கள் பிரிகேட்கள்,றெஜிமென்ட்கள், யுனிட்களிலும் மனித உரிமைக் குழுக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஈ.பிடி.பியினர் கொலை அச்சுறுத்தல்!

புங்குடுதீவு - மடத்துவெளி 8 ஆம் வட்டாரப்பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் சைக்கிளில் வந்த [illegible], மனைவி இருவரையும் ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தியதாக அரசியற்துறைச் செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த கனகசபை - பத்மநாதன் (வயது -44) அவரது மனைவி பத்மநாதன் கமலேஸ்வரி (வயது- 39) இருவருமே ஈ.பி.டி.பி அமைப்பின் மகேந்திரம் என்பவரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

தாம் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளை, குறித்த நபர் தங்களை இடையில் மறித்து கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினார் என இவர்கள் இருவரும் புங்குடுதீவில் உள்ள அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று மாலையே முறையிட்டனர் எனவும் அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

## வைத்தியசாலை பிரேத அறையிலிருந்த சிசுவின் சடலம் வீதியிலிருந்து மீட்பு!

### விசாரணைக்கு சுகாதார அமைச்சர் உத்தரவு

பசறை ஹொப்டன் வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்த சிசுவின் சடலம், நேற்றுக் காலை வீதியில் காணப்பட்ட சம்பவம் குறித்து விசாரனை நடத்த சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், நுவரெலிய சுகாதார சேவைகள் பணிப்பாளரை பசறை ஹெப்டன் வைத்தியசாலைக்கு சென்று நிலமைகளை ஆராயுமாறு சுகாதார அமைச்சர் பணித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஹொப்டன் வைத்தியசாலையில் மரணமடைந்த சிசுவின் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டபோதும், அந்த சிசுவின் உடல் நேற்றுக் காலை வீதியில் காணப்பட்டது. இதனை அடுத்து மக்கள் ஆத்திரமடைந்து வைத்தியசாலையை முற்றுகையிட்டனர்.

இதனை அடுத்து மேற்படி சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு முறையிடப்பட்டது.

பின்னர் மேற்படி சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைசசின் செயலாளர் நிஹால் ஜெயதிலகவின் தலைமையில் விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றினை சமர்பிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

## மாவின் விலையை...

மெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாவின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தால் நாம் வேறு யாருக்காவது நிவாரணம் வழங்கி கோதுமை மாவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்போவதாகவும் கலந்துரையாடலில் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய விலைக்கு மாவினை வழங்கமுடியாதென பிறிமா நிறுவனம் எந்த அடிப்படையின்கீழ் கூறுகின்றதென வினவிய அமைச்சர் இந்த வருடம் ஜனவரியிலிருந்து மே மாதம் வரை கோதுமை கொண்டு வந்த விதம், முழுவருமானம், செலவு அறிக்கைகளை வழங்கும்படி பிறிமா அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட போதும், அவர்கள் அதனை வழங்க மறுத்துள்ளனர்.

### வவுனியாவிலிருந்து....

தலைமையில் கலந்துரையாடல் ஒன்று வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டமாக கிளிநொச்சியில் இருந்து யாழ்பாணத்திற்கு மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்படவுள்ளது. எனவும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக தமிழீழ விடுதலைப் புலிகள், மின்சாரம் வழங்க தேவைப்படும் பிரதேசத்தில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### இலங்கை...

முகமாக ஐ.நாவின் 6700 படையினரும், 1622 பொலிஸாரும் அடுத்த மாதம் முதலாம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதேவேளை - இலங்கையில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரும் பட்சத்தில், இலங்கைப் படைகளைப் பெருமளவில் கலைக்க வேண்டி வரு மனவும், அதற்கு முன்னோடியாக ஐ.நா.சமாதான செயலகப் பிரிவில் இவர்களை இணைக்கும் திட்டத்தில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

### ஏ-9 சோதனை...

இதன்படி இன்றும் நாளையும் இராணுவக்கட்டுப்பாடற்ற, கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையிலான போக்குவரத்துக்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுக்குடியிருப்பு...

நந்தராசா, 48 வயதான சரோஜா, புதுக்குடியிருப்பு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த 35 வயதான சூரியகுமாரி, 5 வயதான பிருந்தா ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் தற்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த விபத்தின்போது ஐந்து மாதக் குழந்தை ஒன்று மயிரிழையில் தப்பியமை குறிப்பிடத்தக்கது.

### அரசுடன்....

ஒருவரிடமும் தொண்டமான் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது - அரசுடன் இணைந்து செயற்படுவது, தமக்கு வழங்கவேண்டிய அமைச்சுக்கள், பிரதியமைச்சுக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்தும் ஏற்கனவே நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக ஒரு இணக்கப்பாடு காணப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இணக்கப்பாடு ஏற்படாத சில விடயங்கள் குறித்து, ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தி இணக்கம் காணப்பட்ட பின்னர் - தனது கட்சியின் உயர் பீடத்துடன் தொண்டமான் பேச்சுக்களை நடாத்தி வருகின்றார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட பின்னர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன், கூட்டுச்சேர்வதற்கு ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டிருப்பதாக தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

### பட்டப்பகலில்....

சுடப்பட்டதாகவும் கூறிய வவுனியா பொலிஸார், இந்தக் கொலைக்கு 9 மி.மீ கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், மீட்கப்பட்ட இளைஞனின் சட்டைப்பையில் இருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டையில் இருந்து திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த அருளானந்தம் அருள்பரன் என்ற அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்திய வவுனியா மாவட்ட நீதிவான் சிற்றம்பலம் சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை உறவினர்கள் அடையாளங்காட்டியதையடுத்து அதைக் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இறந்த இளைஞர் புளொட் முக்கியஸ்தர் ஒருவரின் சகோதரர் எனவும் கருதப்படுகிறது.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.